திராவிடநாடு

கேட்டீரா! சேதி!

சாதியை ஒழிக்கும் முதல் நடவடிக்கையாக, கல்லூரிகளிலும் சர்க்கார் குறிப்புகளிலும் பெயருக்குப் பின்னல் ஒட்டிக்கொள்ளும் சாதிப் பெயர்கள் இல்லாமல் செய்யவேண்டுமென்று சர்க்காருக்கு ஒரு சிடார்சை அனுப்பியுள்ளது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி. நல்ல சிபார்சுதான்! ஆனல் சாதியை ஒழிக்க வேண்டுமென்றே கூறிக்கொண்டு 'பூணூல்' கல்யாணம் நடத்தும் எத்தனை பிரமுகர்கள் இருக்கிருர்கள்? காங்கிரசில் அவர்களுக்கெல்லாம் எவ்வளவு செல்வாக்கு உள்ளது? இதையும் சட்டப்படி தடுக்குவும், யோசனை பிறக்குமா!

✱

தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள தகராறை விசாரித்துத் தீர்ப்பளிக்குமாறு ஒரு நீதிபதியை நியமித்துள்ளது புதுச்சேரி சர்க்கார்! ஆலையில் வேலை செய்யும்தொழிலாளிகள் அல்ல; உலக ரட்சகராலயம் என்று கருதப்படும் அரவிந்த ஆசிரமத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள், இவர்கள். அரவிந்த ஆசிரமத்தின் நிர்வாகிகளுக்கும், இவர்களுக்கும்தான் தகராறு. தீர்த்து வைக்க 'ஆண்டவன்' அழைக்கப்படவில்லை! நீதிபதிபோகிருர்

✱

எங்கெங்கு காங்கிரஸ் தலைவர்கள் சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்தார்களோ அங்கங்கே நினைவுச் சின்னங்கள் எழுப்பப் போகிறதாம், டில்லி. சிறையில் தங்கியிருந்தவரின் பெயர், அவரது சிறைவாச காலம் முதலியவைகளை யாவருக்கும் தெரியும் வண்ணம் சலவைக்கல்லில் செதுக்கிவைக்கப்படுமாம்.

✱

மேலும் ஆறுமாதம் சிறைக்குள் வைக்குமாறு காஷ்மீர சர்க்கார் உத்தரவிட்டுள்ளது. கடந்த மூன்ருண்டு காலமாக, பாதுகாப்புச் சட்டப்படி சிறைக்குள் அடைக்கப்பட்டிருக்கும், முன்னள் பிரதமர் நேருவின் தோழர் ஷேக் அப்துல்லா குறித்துத்தான் இந்த உத்தரவு. இந்திய வரலாற்றில், ஷேக் அப்துல்லாவுக்கு அளிக்கபபட்ட பெருமதிப்பும், இப்போது அவர் அடைக்கப்பட்டுள்ள கோரமும் மிகவும் குறிப்பிடப்படவேண்டியதாகும்! காங்கிரசுக்காகப் பாடுபட்ட எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கானை, பாகிஸ்தான் சர்க்கார் சிறைக்குள் போட்டு சித்திரவதைக்கு ஆளாக்கிய போது சீறிச் சீறிப் பாய்ந்தன இங்குள்ள ஏடுகள். இதோ அப்துல்லா, இங்கே, தான் வளர்த்த கட்சியால் சிறைக்குள் அடைபட்டுக்கிடக்கிருர்! கேட்பார் யார்?

✱

வெள்ளையரால் சுட்டுக் கொல்லப்பட்டும், தூக்குத் தண்டனைக்கு ஆளாக்கப்பட்டும், சைப்ரஸ் தீவிலுள்ள சுதந்திர வீரர்கள் பழிவாங்கப்பட்டுக் கொண்டுள்ளார்கள். இந்தக் கொடுமையை நேரு பண்டிதரும் கண்டிக்கத் தவறவில்லை! ஆனல், அந்த சைப்ரசைவிட மிகக் கொடுமையாக நடத்துகிற தாம், நாகநாட்டில். சைப்ரஸ் தீவில் சுட்டுக் கொல்லப்பட்டோர் தொகையைவிட, நாக நாட்டில் சுட்டு வீழ்த்தப்படுவோர் எண்ணிக்கை அதிகமாம். தகவலை, 'இந்து' ஏடு தருகிறது.

✱

உலகையே நிலை கலக்கிய சர்வாதிகாரி இட்லர், எவ்வளவோ சுகபோகத்துடன் வாழ்ந்தான்! இன்று அவனுடைய 65-வயது சகோதரி, இருக்க இடமில்லாமல் ஜெர்மன் வீதிகளில் அலைகிருராம்! இட்லரின் இரும்புக் கோட்டை போன்ற மாளிகையில் அவருடைய சகோதரி, இதுகாறும் வசித்து வந்தார். அந்த அறைக்கு அவர்வாடகை கொடுக்காததால், அண்மையில் வெளியேற்றப்பட்டார்.

✱

இந்தியாவிலும் அணுசக்தியை எப்படி உண்டாக்குவது என்பதைக் கண்டு பிடித்துவிட்டார்கள். பம்பாய்க்கு அருகிலுள்ள டிராம்வே எனுமிடத்தில் இதற்காக அமைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிச் சாலையில் இந்த முயற்சி வெற்றிபெற்றிருக்கிறது இந்தக் கிழமை. மேற்படி ஆராய்ச்சியின் தலைவரான டாக்டர் பாபா, இந்த வெற்றிகுறித்து விளக்குகையில், அணுசக்தியைக் கொண்டு பல நல்ல காரியங்களைச் செய்யலாமென்றும், முக்கியமாக மின்சாரசக்தியைத் தயாரிக்கலாமென்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

✱

தற்கொலை செய்துகொள்பவர்களில் ஆண்கள் அதிகமா, பெண்கள் அதிகமா என்று புள்ளிவிபரம் சேகரித்து ஐ. நா. சபையின் உலக சுகாதார இயக்கம் தகவல் தந்துள்ளது. அதன்படி எல்லா நாடுகளிலும் ஆண்கள்தான் அதிகமாகத் தற்கொலை செய்துகொள்ளுகிருர்களாம். மூன்றுக்கு ஒருவர்தான் பெண்களாம் உலகிலேயே அதிகமாகத் தற்கொலை செய்துகொள்வோர், ஜப்பான், டென்மார்க், ஆஸ்திரியா, ஸ்விட்சர்லாந்து முதலிய நாடுகளில்தான் அதிகம் உள்ளார்களாம். அயர்லாந்து, சிலி, ஸ்காட்லாந்து, ஸ்பெயின், முதலிய நாடுகளில் குறைவாம். அமெரிக்காவிலும் அதிகம்தானும். ஒரு ஆண்டுக்கு உலகிலுள்ள 25-நாடுகளில் மட்டும் 72,000 பேர் தற்கொலை செய்து கொள்கிருர்களாம்!

★

அந்தோ, தமிழா!

மலர் 15] ஆண்டுச் சந்தா ரூ. 7 [12—8—56] தனிப் பிரதி 2 அணா [இதழ் 6

கொலை! கொலை!!
படுகொலை.
காமராஜர் என்ன செய்கிறார்?
நேரு என்ன சொல்கிறார்?

*

"எலெக்ஷன்! எலெக்ஷன்!!" என்று அலையும் அமைச்சர்களின், பார்வையிலாவது படாதா எனும் ஆசையுடன், இலங்கை வாழ் தமிழர்களின் இன்னல் குறித்து, நாடெங்கும் ஒட்டினோம் இதுபோன்ற சுவரொட்டிகளை.

நம்பிக்கை வீண் போகவில்லையெனக் கண்டோம், நம்மையாளும் பாக்கியம் பெற்ற டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், குடியாத்தம் சென்று கோலோச்சும் பெருமை குறித்துப் பேசிய நாளில், இதுபற்றியும் பேசினாரெனக் கேட்ட போது. குருதி கொட்டிடும் கோரத்தை விளக்கி, அமைச்சர்களின் கவனத்தை இழுத்து, அல்லலுறும் தமிழினத்துக்கு ஆதரவு கிடைக்கச் செய்வோம் என்று நாம் எடுத்துக்கொண்ட இம் முயற்சியினை எள்ளி நகையாடினார் கிருஷ்ணர்! 'என்னமோ, நாடக போஸ்டாராக்கும் என்று பார்த்தேன்' என்றார்!!

கிருஷ்ணர், அறியார் அடியும் குத்தும்—வெள்ளையன் காலத்தும் அவர் செல்லப்பிள்ளை, வெள்ளையனை விரட்டியோர் ஆட்சியிலும் தத்துப்பிள்ளை. கொண்ட கொள்கைக்காகக் குருதியைச் சிந்துவதிலும், கொடுமைகளை ஏற்பதிலுமுள்ள உள்ள உரத்தையும், அந்த உறுதியை உண்டாக்கித் தந்திடும் கொள்கையின் வேகத்தினையும் உணரார், அவர். எனவே, அவருடைய கேலியினைத் துச்சமென மதித்தோம்.

அன்பர் நேருவோ, தொண்டர்தம் தோழர் என்று போற்றப்படும் காமராஜரோ, கிருஷ்ணர்களல்ல; கொள்கைக்காகக் குருதி சிந்துவதிலுள்ள கஷ்டங்களையும், கொடுமைகளை ஏற்பதிலுள்ள உறுதியினையும் உணரக் கூடியவர்கள். எனவே, நம்முடைய சுவரொட்டி காமராஜர் கண்களில் பட்டு, அவர் மூலம் நேருவுக்கு எட்டி அநீதி துடைத்திடும் மார்க்கம் கிடைத்திடும்—அவசியம், அதற்கானவன செய்வார் காமராசர்; ஏனெனில் அவர் அறிவார், இலங்கையில் தமிழர் அடையும் துயரின் அளவினை என எண்ணினோம்.

இதோ, தகவல் தருகிறார், இலங்கையை ஆளும் பண்டார நாயகா! இந்தியப் பிரதமர் நேரு கூறிவிட்டாராம், "தமிழையும், இலங்கை அரசாங்க மொழியாக்க வேண்டும் என்கிற இயக்கத்துக்கு எமது ஆதரவு கிடையாது", என்று. இருபது பேருக்கு மேல செத்தனர் தமிழர்கள்! ஏராளமான சொத்துக்களுக்குச் சேதம்! எரிமலை மேலிருப்பது போலிருக்கிறது இலங்கை வாழ் தமிழர் தம் நிலை! எனினும், நேரு பண்டிதர் இவ்வண்ணம் அறிவித்து விட்டார்.

"அவர், பிறகென்ன செய்ய முடியும்? இது, இலங்கையின் உள் நாட்டு விஷயம். அதில்போய், நேரு தலையிட முடியுமோ!", என்று கேட்கலாம், தோழர்கள். இப்படிக் கேட்போருக்கு மதுரைத் 'தமிழ் நாடு', ஒரு எதிர் வினா எழுப்புகிறது.

"தென்னாப்பிரிக்காவில், ஐரோப்பியர்களுடைய நிறவேற்றுமைக் கொள்கையினால் பாதிக்கப்பட்டு வருந்தும் இந்தியர்களுடைய கோரிக்கைகளை இந்திய அரசாங்கம் ஆதரிக்கவில்லையா? அப்படியிருக்கும் போது, இலங்கையிலுள்ள தமிழர்களின் நேர்மையான உரிமைகளுக்கு ஏன் ஆதரவளிக்கக் கூடாது?"

சிங்கப்பூரில் ஏராளமான தமிழர்கள் வாழ்கிறார்கள்- மொழிக்கு அரசாங்கத்தில் மதிப்பு அளிக்க வேண்டுமெனக் கோரினார்கள். சிங்கை அரசு மறுக்கவில்லை, ஏற்றுக்கொண்டு விட்டது. சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கென ஒரு தனி இடம் அமைத்து, பேராசிரியராகப் பணியாற்றும்படி இங்குள்ள தமிழறிஞர் அரசங்கண்ணனாரையும் அழைத்துள்ளது, சிங்கை சர்க்கார். அதனால், இப்படி தமிழுக்கு ஒரு இடம் வேண்டும் என்று அயல்நாடு சென்று வாழும் தமிழர்கள் கேட்பது அநீதியல்ல! அதனை மறுக்கவேண்டும் என்பதும் அவசியமல்ல! ஆயினும், இலங்கை சர்க்கார், ஏதோ ஒரு துவேஷம் கொண்டு இப்படி யெல்லாம் செய்கிறது.

அதனை, ஏன் நேரு பண்டிதர், எடுத்துணர்த்தலாகாது? இஸ்ரேல் எப்படி அரபு நாடுகளுடன் இணைந்து வாழ வேண்டும் என்று போதிக்கிறார், இந்தியர்களுக்குப் பாகிஸ்தானில் உரிமைகள் மறுக்கப்படக் கூடாது என்று கர்ச்சிக்கிறார், கடல் கடந்தும் இந்தி மொழி பரவவேண்டுமென்பதில் ஆசை காட்டுகிறார்; தகராறுள்ள இடங்களுக்குப் பறந்து சென்று 'பாலம்' போட கிருஷ்ணமேனன் வேறு உள்ளார்! இவ்வளவு சக்தியைப் பெற்றுள்ள பண்டித் நேருவுக்குப் பண்டார நாயகாவிடம் சம்மதம் பெற்றுத் தருவதா, கடினம்? ஒரு போதும் இல்லை!

இலங்கை மொழிப் பிரச்னையில் மட்டுமல்ல, பர்மாவிலிருந்து பல தமிழர்கள் தமது சொத்து சுகத்தை இழக்க வேண்டிய நிலைக்கு ஆளாகித் தத்தளிக்கிறார்களே, ஏதாவது கவனம் சென்றதுண்டோ? அப்படிப்பட்ட பர்மாவுக்குத்தான் கடன் கடனாக தருகிறார்! கரீன்களை அடக்கத் துப்பாக்கியும் குண்டுகளும் அனுப்புகிறார்!

நேருவுக்கு அலட்சியம் இருக்கிறது.
அப்படி அலட்சியம் ஏற்படுவதும் விந்தையல்ல.
ஏனெனில் அவர் நம்மவரல்ல!

ஆனால், நம்மவர்களாக யிருக்கும் காமராஜர்கள், இதுபோன்ற சமயத்தில் என்ன செய்யவேண்டும்? தமது செல்வாக்கினை உபயோகித்துத் தவிக்கும் நம்மவர்களுக்கு நீதி வாங்கித் தருவதில் முழுமுயற்சியுடனன்றோ எடுத்துக்கொள்ள வேண்டும்?

இலங்கையில் இருபது தமிழ்ப் பிணங்கள் விழுந்தன என்ருல் அவர்கள் எல்லாம் யார்? அறுந்த தாலிகள் யாருடையது; அமங்கலிகளானவர்கள் யார்? அவர்களுக்கேற்பட்ட கதியைக் குறித்து நேருவுக்குக் கண்ணீர் வராமலிருக்க நியாயமுண்டு! அவர், அந்நியர்! ஆனுல், நானும் தமிழன்—என் உடம்பில் மட்டும் தமிழ் இரத்தம் ஓடவில்லையோ என்று சொல்லித் திரியும் இந்தக் காங்கிரஸ் அமைச்சர்கள் கலங்கியிருக்க வேண்டாமா — நேருவுக்கு எடுக்கும் எத்தனையோ 'காவடி'களில் இதுவும் ஒன்றெனக் கருதிப்போகக் கூடாதா?

நாம் அறிந்த வரையில் காமராஜர் அரசு இந்தப் பிரச்னையில் எவ்வித சிரத்தையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

பண்டாரநாயகா, பகிரங்கமாக அறிவிக்கிருர்,

கொழும்பு ஆக. 1

> இலங்கையில் தமிழையும் அரசாங்க மொழிகளில் ஒன்ருக ஆக்கவேண்டும் என்று நடத்தி வரும் இயக்கத்துக்கு இந்திய அரசாங்கம் ஆதரவு கொடுக்கவில்லையென்றும், இனியும் ஆதரவு கொடுக்காது என்றும் இலங்கைத் தலைமை அமைச்சர் பண்டார நாயகா அறிவித்தார். அந்த இயக்கத்துக்கு ஆதரவு கொடுத்ததில்லை, இனியும் ஆதரவு கொடுப்பதில்லை என்று இன்று சென்னை அரசாங்கமும் வாக்குறுதி அளித்துள்ளதாக பத்திரிகை நிருபர்கள் கூட்டம் ஒன்றில் கூறினுர்.

இறந்தோர், எரிமலையென உலவுவோர், தவிப்போர், தத்தளிப்போர், அகதிகளாக வருவோர், அல்லாடுவோர், தமிழர்கள். அவர்களுக்காக, என்ன செய்யப்போகிறீர்கள், என்று கேட்கவேசுவரொட்டிகள் ஒட்டினேம்.

காமராஜர் என்னசெய்யப்போகிருர்?

நேரு என்ன சொல்லப்போகிருர்?

கொலை! கொலை!! படுகொலை.

என்று, குறிப்பிட்டு. கொலை நடந்தாலும், குருதியாறு ஓடினுலும், அதில் தமிழர் தம் தலைகள் மிதந்தாலும் எமக்குக் கவலையில்லை என்று உறுதிமொழி அளித்து விட்டார்கள், ஊராளும் உத்தமர்கள்! இந்தச் செய்தியினை மக்களுக்குப் படைக்கிருேம், "அந்தோ தமிழா உன் கதி இதுவா?", எனும் கண்ணீருடன்!!

கண்ணீர், கனலாகும் காலமும் வெகுதூரத்திலில்லை என்பதையும் இதே சமயத்தில் இவர்களுக்கு எச்சரிக்கிருேம். எஜமான விசுவாசம் காமராசருக்குப் பெரிதாயிருக்கலாம்! ஆனுல் தமிழ் மக்களுக்கு, அவரதுசெய்கைமகத்தானதுரோகமாகும்!

அவர் தமிழ் நாட்டாருக்கு வழங்கியிருக்கும் அதீதிகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. அதற்குப் பதிலளிக்காமல் போகமாட்டார்கள், தமிழ்மாநிலத்தார். சமயமும் நெருங்கிக் கொண்டிருக்கிறது! ★

சாதித்தது என்ன?

[இரா. வீரசப்பு, சேலம்]

கடந்த தேர்தலில் வெற்றிபெற்றுவிட்டது வன்னியர் சங்கம்,இரண்டு உயிர்களைப் பலி கொடுத்து! அதாவது ஒன்று கடலூர் மாவட்டம்; மற்ருென்று சேலம் மாவட்டம். கடலூர் மாவட்டத்தில் மஜீத் என்ற முஸ்லீம் குத்திக் கொல்லப்பட்டார்; அதுபோல் சேலம் மாவட்டத்திலும் முத்துக்கவுண்டர் குத்திக்கொல்லப் பட்டார். இப்படி இரண்டு பிணங்களின் இரத்தத்தில் துவைத்தெடுத்து வெற்றிக் கொடி நாட்டியது நம் வன்னியர் உலகம்!

ஆனுல்,இன்று இரண்டு அமைச்சர்களை ஏற்றி இறுமாந்து கிடக்கிறது! நாம் அன்று எந்த லட்சியத்திற்காகப் பொதுக் கூட்டங்கள் போட்டு, ஊர்வலங்கள் நடத்தி மாநாடுகள் கூட்டி முரசு முழங்கினேமோ, அந்தக்கோரிக்கைகள் இன்று வரை கண்டோமில்லை! அன்றைக்கு சுமை தாங்கிய வன்னியன், இன்றைக்கும் சுமைதாங்கிதான்!அன்று கழனியிலே கஷ்டப்பட்ட வன்னியன் இன்று அதிகமாகக்கஷ்டப்படுகிருன்! அன்று குமஸ்தாவாக இருந்த வன்னியன் இன்றும் குமஸ்தாவாகவே காட்சியளிக்கிருன். அன்று படிக்க இடவசதியின்றி இருந்த சிருர்கள் இன்றும் இடவசதியின்றி அவ்திப்படுகின்றனர். ஒரு சில படித்த வன்னிய மாணவர்கள் வேலை தேடி அலைகின்ற காட்சி பரிதாபத்திற்குரியதாயிருக்கிறது, இவற்றையெல்லாம் ஆராய்ந்தறிந்து சிந்திக்காதது ஏனே!?

வன்னியர் முன்னேற்றத்திற்காகத்தான் மந்திரி பதவி வகித்து வருகிறேன் என்று மார் நிமிர்த்து கூறும் நம் இன மந்திரியை கேட்கேட்கிருேம். நீங்கள் பதவியேற்று ஆண்டுகள் சிலஉருண்டோடியதே! இதுவரை சாதித்தது என்ன? இதுவரை ஒரு ஜில்லா கலெக்டராகவோ, ஒரு ஜில்லா சூப்ரண்டெண்ட்டாகவோ, ஒரு ஜில்லா ஜட்ஜாகவோ, நம் இனத்தவர் ஒருவராவது இந்த மாநிலத்தில் உயர்ந்த பதவிக்கு கொண்டு வர முடிந்ததா? வெட்கம்! வெட்கம்! வன்னிய உலகம் கை கொட்டி நகைக்கிறது. மந்திரி பதவிஎன்றும் நிலையானதல்ல. இன்று வரும் நாளை போகும். ஆனுல்,உத்தியோகங்கள் அபபடிப் பட்டதல்ல-நிரந்தரமானது. இதை நமது மந்திரிகள் அறியாதது ஏனே! "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்பது முதுமொழி. அதை விட்டு ஊர் சுற்றி வருவதில் பயன் ஒன்றும் இல்லை! இம்மாதிரி சூழ்நிலையை வளரவிடுவது நம் சமூகத்திற்கே ஆபத்து! நம் இன சட்ட சபை மெம்பர்கள்மேல் நம்பிக்கை வைத்து அவர்களை நமது பிரதிநிதிகளாகச் சட்ட சபைக்கு அனுப்பி வைத்தோம். எதற்காக? நம் இன மாணவர்கள் கல்லூரிகளில்படிக்கச் சகலவசதிகளையும போராடிப் பெறுவார்கள், நீண்ட கால சர்வீசு இருந்தும் உத்தியோக உயர்வின்றி இருக்கும் நம் குல உத்தியோகஸ்தர்கள் உயர் பதவி அடைவார்கள், படித்தும் வேலையின்றி இருக்கும் தோழர்களுக்கு வேலை கொடுக்கத் திட்டம் தீட்டுவார்கள், ஆயிரக் கணக்கான வன்னிய ஏழை குடும்பங்கள் இருக்க இடமின்றித்தவிப்பவர்களுக்கு காலனிகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்வார்கள், உழுது உழுது ஊருக்கு கொடுத்த வன்னியன் தனக்குநிலம்உடைமையாக்க வழி முறை வகுப்பார்கள். என்றெல்லாம் எண்ணித்தானே பெருமை கொண்டிருந்தோம்.கடைசியில் "இலவு காத்த கிளி போல்" அன்ருே ஆகிவிட்டது.

—"உழைப்பாளி"

1—7—56

RAMAMOORTHY. M. O. L.

முகப்பில்...

சம்மதம் பெற்ற சர்வாதிகாரி?

சூயஸ் பிரச்சினை பிரிட்டனுக்குத் தலைவேதனையாகி, உலகில் உள்ள அமைதி கெட்டுப் பெரும் போர் மூண்டுவிடுமோ என்ற கிலியைக் கிளப்பி விட்டிருக்கும் இதே நேரத்தில், ஜிப்ரால்டர் பிரச்சினை ஒன்றும் இருக்கிறது என்று பிராங்கோ உலகுக்கு நினைவூட்டுகிறார்.

ஸ்பெயின் நாட்டில் சர்வாதிகாரியாகி ஆட்சி நடாத்தி வருபவர் பிராங்கோ.

மன்னராட்சியை வீழ்த்திவிட்டு, ஜனநாயகத்தையும் சாய்த்துவிட்டு, பல்வேறு நாடுகளுடன் கலந்து தொடர்பு கொள்ளும் போக்கு பற்றியும் அக்கரை காட்டாது, ஆட்சியில் வலிவு காட்டி நடத்தி வரும், பிராங்கோவை முகப்பில் காண்கிறீர்கள்.

பிராங்கோவின் பிடியில் இருப்பது பற்றி ஸ்பெயின் நாட்டவர் கொந்தளித்து, குமுறி, இப்போது அமைதியே கூடப் பெற்றுவிட்டனர் என்று கூறலாம்,

உள்நாட்டில் புரட்சி பட்டுப் போய்விட்ட நிலையை ஏற்படுத்திக் கொண்டு விட்டார் பிராங்கோ.

சர்வாதிகார ஆட்சி 'சடசடென'ச் சரியும் என்று எதிர்பார்த்த நேரத்தில், பல்வேறு நாடுகளும், ஸ்பெயினை ஒதுக்கிவைத்தன, சர்வதேசப்பிரச்னைகள் குறித்த மாநாடுகள், கூட்டுகள், குழுக்கள் எதிலும் ஸ்பெயின் இடம் பெறுவதில்லை.

பிராங்கோ அதுபற்றி அதிகக் கவலையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை: உள் நாட்டில் ஆட்சியைப் பலப்படுத்திக் கொள்வதிலே முழு மூச்சுடன் வேலை செய்தார்—அதில் வெற்றியும் கண்டுவிட்டார்.

எதிர்க்கும் ஆற்றல் படைத்தவர்கள்; ஒன்று அழிக்கப்பட்டுப் போயினர், அல்லது வெளிநாடுகள் சென்றுவிட்டனர்.

பிராங்கோவின் போக்கு ஜனநாயக விரோதமானது, அவர் நடத்தும் ஆட்சி நாகரீகத்தின் மீது கட்டப்பட்டதல்ல, எனவே அவருடன் தொடர்பு கொள்வதே கேவலம் என்று கூறிவந்த நாடுகளெல்லாம் ஆட்சியைப் பிராங்கோ பலப்படுத்திக் கொண்டானது கண்டு, மெள்ள மெள்ள ஜாடைமாடையாகப் பேசக்கூடத் தலைப்பட்டுள்ளன.

மற்ற நாடுகளைவிட, அமெரிக்கா ஸ்பெயின் நாட்டுச் சர்வாதிகாரி பிராங்கோவுடன் சற்று வெளிப்படையாகவே தொடர்புகொள்ள முன்வந்தது.

ஜிப்ரால்டர், கடலில் உள்ள கற்கோட்டை.

ஸ்பெயின் நாட்டிடம் இருந்து வந்த ஜிப்ரால்டர், பிரிட்டிஷாரால் பிடிக்கப்பட்டு, இப்போது பிரிட்டிஷ் நிர்வாகத்தில் இருந்துவருகிறது.

கடலரசாக பிரிட்டன் கொடிகட்டி ஆண்டுகொண்டிருக்கப் பெரிதும் உதவும் தளங்களில் ஜிப்ரால்டர் ஒன்று.

சூயஸ் கால்வாய், ஜிப்ரால்டர். மால்டா, சைப்ரஸ், சிங்கப்பூர், திரிகோணமலை என்று இப்படி அமைந்துள்ள தளங்கள் ஒவ்வொன்றிலும், இப்போது உரிமைக்காரர்கள் கிளர்ச்சி நடத்துகிறார்கள்.

நீண்ட காலமாக, தனது ஏகாதிபத்திய வசதிக்காக இந்த இடங்களை எல்லாம் கைப்பற்றிவைத்திருந்த பிரிட்டன், இப்போது வீறிட்டெழுந்துள்ள உரிமை

பொங்கி வழிகிறது!

பிரெஞ்சு பாலிஷையும், வார்னிஷையும் குடிக்கிறார்களாம், நகர் புறங்களில்.

மரத்திலிருந்து திருட்டுத்தனமாகக் கள் இறக்கி சாப்பிடுவதும் குறையவில்லையாம்.

கள்ளச் சாராயம் காய்ச்சுவதும், திருட்டுத்தனமாகக் குடிப்பதும், அதிகரிக்கிறதாம்.

சர்க்காரின் அறிக்கை கூறுகிறது, இப்படி! 1954—55 ஆண்டுல், மதுவிலக்கு அமுல் நடப்பது குறித்து வெளியிடப்பட்டுள்ள நிர்வாக அறிக்கை தெரிவிக்கிறது இப்படி!

புதுச்சேரியை இந்திய யூனியனுடன் இணைத்தது இதல், அருகிலுள்ள தென் ஆற்காடு வாசிகளுக்கு, கள்ளத்தனமாக மது வகைகளைப் பெறும் 'மார்க்கம்' சுலபமாகிவிட்டதாம.

குடி பெருகுகிறதே! சட்டம் தவிடு பொடியாகிறதே! — என்று அங்கலாய்க்கிறது, சர்க்கார்.

குடி எப்படி பெருகாமலிருக்கும்? ஏழையும் எளியவனும்தான் கண்ணுக்கு அகப்படுகிறான்! தண்டனைக்கும் சிக்குகிறான்!

அமைச்சர்கள், கொஞ்சம் உறுதியாக நடந்தால் போதுமே. எங்கெங்கிருந்தோ, எப்படி எப்படியோ அகப்படு.ம் வொயினும், விஸ்கியும், பிராந்தியும் தப்பி விடுகிறது! பிரெஞ்சுப் பாலிஷும் வார்னிஷும் அகப்படுகிறது. பிடித்து அடைத்தால், வெளியில் விட்டதும் மீண்டும் அதே உத்தியோகம் ஆரம்பமாகிறது ஏழ்மையால். சிறை—விடுதலை—சிறை, இப்படி உருள்கிறது, ஏழையின் வாழ்வு! பணம் படைத்தவர்களுக்கோ, மதுவிலக்குச் சட்டம் அவர்கள் வீட்டு நாயைப்போல. இந்நிலையில் எப்படி வெற்றி கிடைக்கும்?

உணர்ச்சியின்முன்பு நின்று தாக்குப்பிடிக்க முடியாமல், அடக்குமுறையைச் சில இடங்களில் அவிழ்த்துவிட்டும், அச்சமூட்டிச் சில இடங்களில் பணியவைக்க முயன்றுகொண்டும் இருக்கிறது.

இருபத்து நாலு நாடுகளின் மாநாடு நடத்தி, சூயஸ் பிரச்சினைக்குப் பரிகாரம் காணவேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதும், இந்தப் போக்கிலே ஒருவகைதான்.

ஜிப்ரால்டர் ஸ்பெயினுக்குச் சொந்தமானது—அதனைத் திருப்பித் தரவேண்டும், என்று ஸ்பெயின் கேட்டவண்ணம் இருக்கிறது.

பிரிட்டனுக்கு, ஜிப்ரால்டர் ஜீவநாடியாகிவிட்டது; அதனை எக்காரணம்கொண்டும் இழக்கச் சம்மதியோம், இழந்திடின் இங்கிலாந்து நாட்டின் வாழ்வுக்கே பேரிடி நேரிட்டுவிடும் என்று பீதியுடன் பேசுகிறது, பிரிட்டன்.

ஆண்டு தவருமல், ஸ்பெயின் ஜிப்ரால்டர் தினம் நடத்துகிறது, தன் உரிமைக் குரலை எழுப்புகிறது. இந்த ஆண்டு நடைபெற்ற ஜிப்ரால்டர் தினம், வழக்கமாக நடைபெறுவதைவிட சற்று அதிகமான விறுவிறுப்பு பெற்றது; காரணம் நாசர் சூயஸ் சம்பந்தமாக எடுத்துக்கொண்ட நடவடிக்கை!

சூயசைத் தேச உடைமையாக்கிக்கொள்ள நாசருக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அதே விதமான உரிமை, ஜிப்ரால்டரைக் கைப்பற்றிக்கொள்வதற்கு ஸ்பெயினுக்கு இருக்கிறது, என்று ஸ்பானிஷ் நாட்டுப் பத்திரிகைகள் எழுச்சியூட்டும் விதத்தில் எழுதியுள்ளன.

ஸ்பெயின், தொழிலில், வாணிபத்தில், வல்லரசாக இன்று இல்லை: ஆனால் கிடைக்கும் வளத்தைக் கொண்டு, மக்கள் ஆனந்தமாக வாழக் கற்றுக்கொண்டுள்ளனர்; முகப்பு, அதனை எடுத்துக்காட்டுவது காணலாம்

மலைச் சாரலில் மல்லிகை மணம்! மாதர் விழிகளில் கனிவு! வீதியெல்லாம் விழாக் கோலம்! இரவெலாம் இன்பப் பொழுதுபோக்கு என்ற முறையிலே, ஸ்பெயினில் வாழ்க்கை நடத்துகிருர்கள்-உள்ளவர்கள்!

பாட்டுப்பாடி ஆட்டமாடி, தாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழச் செய்யும் கூத்தாடும் கூட்டத்தினர், குதூகலம் தர இருக்கின்றனர்!

கேளிக்கை மண்டபங்களைக் கொண்ட விருந்து விடுதிகள் உள்ளன.

புலிபோலச் சீறி, யானை போலத் தாக்கவரும், முரட்டுக் காளையுடன் போரிடும் வீர விளையாட்டு, கண்டோர் வியக்கத்தக்க முறையில் நடைபெறுகிறது.

ஸ்பெயின் நாட்டிலே, எங்கு பார்த்தாலும் தொழிற்சாலைகள் நிறம்பிய பெரிய பட்டினங்கள் உள்ளனவா, எனின், இல்லை!

பெரிய நாகரிகப்பட்டினங்கள் என்ற பெயர் கூறத்தக்க இடங்களே மூன்றுதான், மாட்ரிட் (தலைநகரம்) பார்சிலோனு, செவலி என்பவைகள்.

ஆனல் இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் விதமான வசீகரம் பெற்றவை.

ஆண்டவன் தனக்குப் பிரியமானவர்களுக்கு செவிலியில் வீடு தருகிருர்— என்று பழிமொழியே உண்டாம்! அப்படிப்பட்ட சிங்கார நகரமாம்!

மற்ற நகர்களிலும், காலை நேரத்தில் வெறிச்சென்று இருந்தாலும் மாலை பிறந்ததும் மகிழ்ச்சி மலருமாம், இரவெல்லாம் இன்ப மணமாம்!

ஆடவரும் பெண்டிரும், அழகாக அலங்கரித்துக்கொண்டு உல்லாசமாகப் பொழுது போக்க, மாலை வேளைகளிலே குடும்பம்குடும்பமாக, நகரின் நடுச்சாலைகளில் செல்வராம்!

வீட்டுக்குள் காலைவேளைகளில் மட்டுமே அடைபட்டுக் கிடப்பராம்—மாலையில், நகரச் சாலைகள், நாட்டியக் கொட்டகைகள், விருந்து விடுதிகள், வேடிக்கையான பொழுதுபோக்கிடங்கள், இங்குதான் மக்கள் கூடி மகிழ்வராம்.

மக்கள் இத்தகைய போக்கில் இருப்பதை தனக்குச் சாதகமாக்கிக்கொண்டதாலேபோலும் பிராங்கோ இன்று எதிர்ப்பு அத்தனையும் முறிந்துபோன நிலையைப் பெற்று, 'சம்மதம் பெற்றுவிட்ட சர்வாதிகாரியாகிவிட்டார்.

ஜிப்ரால்டர் விஷயமாக, பிராங்கோ மும்முரமாக உரிமை கொண்டாடுவாரோ? புதிய பிரச்சினை கிளம்பிவிடுமோ, என்ற கவலை பிரிட்டனுக்கு இல்லாமற் போகவில்லை. இந்த ஆண்டு நடத்தப்பட்ட ஜிப்ரால்டர் தினம், பிரிட்டனுக்கு இந்தக் கவலையை அதிகப்படுத்திவிட்டிருக்கிறது. ☆

நீங்கள் படித்துவிட்டீர்களா?

புத்தம் புதிய நூல்

சி. என். ஏ. தீட்டிய

நாட்டின் நாயகர்கள்

விலை அணு எட்டு

வியாபாரிகளுக்கு 25 0/0 கழிவு. தனிப்பிரதி வேண்டுவோர் போதிய தபால் தலைகள் அனுப்புக.

பரிமளம் பதிப்பகம்,

காஞ்சீபுரம்.



காஞ்சீபுரம்

12—8—'56

தம்பி !

மருத்துவர்களிலே பலவகை உண்டல்லவா—நோயின், மூலம் கண்டறியாமல், மருந்து கொடுத்துவிடுபவர்கள்—மருந்து பலனளிக்காமற்போனால், அதனை உண்டவன் பத்தியம் தவறிவிட்டான் என்று பழிபோடுபவர்கள் — மருந்து அபூர்வமானதுதான், ஆயிரம் பேர் இதிலே குணம் கண்டனர். ஆனால், உன் 'கிரஹம்' சரியாக இல்லை, அதனாலே பலன் ஏற்படவில்லை என்று கூறிக் கையை விரிப்பவர்கள்; இப்படிப் பல வகையினர் உண்டல்லவா! ஆனால், எந்த மருத்துவரும், தன் மருந்துண்டவனுக்கு நோய் தீராதது தெரிந்தும், அதனை மறைத்துவிட்டு, தன் மருந்து அபூர்வமானது, கைகண்டது, உண்டோரனைவரும் பலன் கண்டனர், என்று கூறிக்கொண்டிருக்கமாட்டார். ஆனால் ஒரு மருத்துவர், தன் மருந்துதான் கைகண்டது, அதனையேதான் அனைவரும் உட்கொள்ள வேண்டும் என்று அங்காடியில் நின்று கூவுகிறார்; அவருடைய மருந்தை உட்கொண்டவரோ, மனையில் இருந்துகொண்டு, ஐயோ! மார்வலி தாள முடியவில்லையே! மயக்கம் வேறு மேலிடுகிறதே! குலையில் ஏதோ குத்துவதுபோலிருக்கிறதே!—என்று கதறுகிறார்.

மருத்துவர் அளித்த மருந்து, நோயைத் தீர்க்கவில்லை என்பதைக் கூறிக் குமுறுவதுடன், மருத்துவர் தந்தது மருந்தே அல்ல, அவரை மருத்துவராகக் கொண்டதே பெருந் தவறு, தீங்கிழைத்துவிட்டது, என்று கூறிக் கைபிசைந்து கொள்கிறார்; அட பாவமே! மிகமிக நம்பிக்கையுடன், மருந்து உட்கொண்டாயே, பலனே இல்லையா? என்று பச்சாதாபத்துடன் கேட்பவரிடம், ஆமய்யா ஆம்! நம்பினேன், ஏமாற்றம் கண்டேன்; மருத்துவர் கேட்ட தொகையை முகங்கோணாமற் கொடுத்தேன், ஆனால் நோய் போகவில்லை, நொந்து கிடக்கிறேன், மனம் வெந்து கிடக்கிறது, என்று கூறுகிறார்.

அதேபோது, வேறோர் புறத்திலே, மருந்தளித்த மருத்துவர், மார்தட்டுகிறார், மன்றத்தில் கூறுகிறார்.

நல்ல மருந்து
நலிவு தீர்க்கும் மருந்து
நான் கண்ட மாமருந்து
நமது பிணியெலாம் ஒழித்திடும் ஒரே மருந்து!

என்று புகழ்ப்பண்ணே பாடுகிறார்.

மருந்து பலனளிக்கவில்லை என்பதைக் கூறிக் குமுறும் நோயாளியின் குரலில், வேதனை ததும்புகிறது, நான் கண்டறிந்த மருந்து கைகண்டது என்று பெருமை பேசும் மருத்துவரின் குரலிலேயோ, பெருமிதம் பொங்குகிறது!

இலவுகாத்த கிளி

எங்கு நடைபெறுகிறது இத்தகைய நிகழ்ச்சி என்று கேட்கிறாயா தம்பி! எங்கு நடைபெறும்? எதையும் எளிதாக நம்பிடும் நல்லவர்கள் ஏராளமாக உள்ள தமிழகத்தில் தவிர!

அண்ணா! உனக்கு ஏதோ உடல் நலமில்லையாமே, அதனாலே உள்ளம் உறுத்தி, மருத்துவ முறைகள் குறித்து எழுதத் தலைப்பட்டனையோ, என்று கேட்கத் தோன்றும். தம்பி, நான் குறிப்பிடுவது உடற்கூறு பற்றிய மருத்துவம் அல்ல; சமூகத்திலே நெளியும் நோய் நீக்குவதற்கான மருத்துவர்கள் பற்றிக் குறிப்பிடுகிறேன்; அதிலே ஏற்பட்டுள்ள வேதனை தரும் நிலைமையை விளக்க, எடுத்துக்காட்டாக, மருத்துவர் கதை சொன்னேன்.

இனி, நோயாளி கதறுவதைக் கேள், தம்பி!

அன்றைக்குச் சுமை தாங்கிய வன்னியன் இன்றைக்கும் சுமைதாங்கிதான்!

அன்று கழனியிலே கஷ்டப்பட்ட வன்னியன் இன்று அதிகமாகக் கஷ்டப்படுகிறான்.

அன்று குமாஸ்தாவாக இருந்த வன்னியன் இன்றும் குமாஸ்தாவாகவே காட்சியளிக்கிறான்.

குலையில் குத்தல் — கண்களில் எரிச்சல்—மண்டையில் குடைச்சல் —என்று நோயாளி கூறித் தவிப்பதுபோலில்லையா, இந்தப் பேச்சு.

மருந்து உட்கொள்ளுவதற்கு முன்பு இருந்ததைவிட நோய், அதிக வேதனை தருவதாகிவிட்டது என்றல்லவா நோயாளி கூறுவது கேட்கிறது.

நோயாளி யார்? வன்னிய சமூகம்.

மருந்து என்ன? இரண்டு அமைச்சர்களைப் பெற்றது.

மருந்து சாப்பிட்ட பலன் என்ன? நோய் அதிகமாகிவிட்டது, என்று அவதிக்கு ஆளான வன்னியத் தோழர் கூறுகிறார்.

வன்னிய சமூகத்தின் உரிமை இதழாகத் திகழ்ந்துவரும் 'உழைப்பாளி'யில், வன்னியன் அன்றுபட்ட அவதி இன்று குறையக் காணோம் என்று வன்னிய குலத்தவர் ஒருவரே மனம் நொந்து எழுதுகிறார்.

மருத்துவரோ, கூசாமல், குன்றாமல், அச்சம் காட்டாமல், பச்சாதாபப்படாமல், மறுப்பார்களோ, கேள்வி கேட்பார்களோ என்று கவலைப்படாமல், தமது மருந்தினைக் கூவிக் கூவி விற்கிறார்.

“வரப்போகும் பொதுத் தேர்தலில் மக்கள் ஒன்றுபட்டு, காங்கிரஸ் வெற்றிபெறப் பாடுபடவேண்டும். அதன்மூலம் பிற்பட்ட மக்கள் பல நன்மைகளை அடையமுடியும். இதர கக்ஷிகளின் பிரசாரங்களுக்குச் செவி சாய்க்கக்கூடாது!”

அமைச்சர் S. S. இராமசாமிப் படையாச்சியாரின் பேச்சு, தெற்கே, அவர் வரவேற்கப்பட்ட ஓரிடத்தில் திருவாய் மலர்ந்தருளியது!

காங்கிரஸ்தான், பிற்பட்ட மக்களின் பிணிபோக்கும் மாமருந்து என்று அம்மருந்தினை வன்னிய மக்கள் உட்கொள்ளச் செய்த அரசியல் மருத்துவர், கூறுகிறார். தம்பி! மருத்துவர் இப்படிப் பேசுகிறார், நோயாளி மனம் நொந்து பேசியதை (முழுவதும் அல்ல) நான் முதலிலே, எடுத்துக் காட்டினேன்.

மருத்துவர்களிலே, இப்படிப்பட்ட மனதிடமும், உண்மையை மறைத்திடும் திறமும், அநேகருக்கு ஏற்படமுடியாது! புடம் போட்டதில் தவறோ, அரைவையில் பதம் இல்லையோ, காய்ச்சியதிலே தரம் குறைந்ததோ, ஒரு குண்டுமணி 'வீரம்' அதிகமோ, பூரம் போதுமான அளவு சேர்க்கவில்லையோ, என்று தமது மருந்து முறையிலே ஏற்பட்டுவிட்ட குறை ஏதேனும் இருக்கக்கூடும் என்றுதான் எந்த மருத்துவரும் எண்ணுவாரே தவிர, சுமைதாங்கி சுமைதாங்கியாகவே இருந்து கஷ்டத்தைச் சுமக்கிறோமே! என்று வேதனையுடன், வன்னியர் நிலை குறித்து, வன்னியரின் உரிமைக்காகப் பாடுபடும், 'உழைப்பாளி'யில் ஒரு வன்னியர் எழுதி, உண்மையை வெட்ட வெளிச்சமாக்கியும், அதனை மறைத்துவிட்டு, அல்லது அலட்சியப்படுத்திவிட்டு, வன்னியர் போன்ற பிற்பட்ட வகுப்பாருக்குள்ள பிணிபோக்கும் மாமருந்து காங்கிரஸ் ஒன்றுதான், என்று அரசியலில் மருத்துவராக உள்ள இராமசாமி மந்திரியார் கூறுவதுபோல, எந்த மருத்துவரும் கூறத் துணிய மாட்டார்கள்!

மாணிக்கவேலரும் இராமசாமிப் படையாச்சியாரும் மந்திரிகள்!!

தம்பி! இவர்கள், மந்திரிகளாக மட்டுமல்ல, மந்திரி சபைகளை அமைக்கும் உரிமையும் வலிமையும் பெறவேண்டுமென்பதிலே, நான் மிகுந்த அக்கரை கொண்டவன்; ஆனால் எந்த நோக்கத்துக்காக இவர்களை, வன்னிய சமூகம், தலைவர்களாகக் கொண்டதோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றி வைப்பதற்கான, முழு அதிகாரமும் வசதியும் பெற்ற நிலையில், மந்திரிகளாகத் திகழ வேண்டும் என்று ஆசைப்பட்டவன்.

எனக்கு, மாணிக்கவேலரிடம் தொடர்பு அதிகம் ஏற்பட்டதில்லை; ஆனால் S. S. இராமசாமி அவர்களிடம் தோழமை அளவுக்குச் செல்லக்கூடும் என்று நான் ஆசை கொள்ளும் தன்மையில் எனக்குத் தொடர்பு இருந்தது.

அவர், தமக்குக் கிடைத்த வலிவையும் வாய்ப்பையும், வகுப்பு மூலம் கிடைத்த ஆதரவையும் அடிப்படையாகக்கொண்டு நாட்டிலே, பதவிப்பாசம் விட்டுப் பணியாற்றி, பிற்பட்ட வகுப்பினரின் நம்பிக்கைக்கும் பிரியத்துக்கும் உரிய பெருந்தலைவராக உருவெடுக்க வேண்டும் என்ற நம்பிக்கையும், ஆவலும் கொண்டிருந்தேன்; ஆனால் ஆசையுடன் காய் **கனியட்டும் என்று நாம் இருக்கும் நேரத்தில், அணில் கொத்தித்தின்று விடுவதுபோல, பிற்பட்ட வகுப்பினரின் பெருந்தலைவராக வளர்ந்திருக்க வேண்டியவர், மந்திரியானார்;** அந்தப் பதவியில் சிக்கிக் கொண்டதும், வகுப்புக்குக் கட்டுப்பட வேண்டிய அவசியம் அவருக்கு இல்லாமற் போனதுடன், வன்னிய சமூகப் பாதுகாப்புக்கும் உரிமைக்கும் அமைத்த உழைப்பாளிக் கட்சியை அவரே, கூசாமல் குமுறாமல், வெட்டிப் புதைத்துவிட்டார்!

அவர் பேசுகிறார், பிற்பட்ட மக்களுக்குப் பிணி போக்கும் மாமருந்து, காங்கிரஸ் ஒன்றுதான் என்று!

அவரால் ஊட்டப்பட்ட மருந்து, நோயைத் தீர்க்கவில்லை, என்பதை நொந்த உள்ளத்துடன் 'உழைப்பாளி' எடுத்துக் காட்டுகிறது.

வன்னியர் இருவர் அமைச்சர்களாகி விட்டனரே, என்று பொறாமை கொண்ட, பிற வகுப்பு ஏட்டிலே, யாரோ வழிப்போக்கன் எழுதுவதல்ல; இந்த இருவர் அமைச்சர் கோலம் பூண்டது கண்டு குதூகலம் கொண்ட வன்னிய சமூகத்தின் ஏட்டில், ஒரு வன்னியர் எழுதுவது என்பதை, ஏனோதானோ என்ற போக்கினருக்கும், இவர்கள் இப்படித்தான் இல்லாததும் பொல்லாததும் பேசுவர் என்று நமது கழகம்பற்றி அலட்சியம் காட்டுவோருக்கும் எடுத்துக் கூறு, தம்பி!

முன்பு இருமி ஈளைகட்டிக் கிடந்தது, என் மருந்து உட்கொண்ட பிறகு, வாலிப முறுக்கு வந்துவிட்டது.

உருகிக் கருகி இருந்தவன் இன்று என் மருந்தின் பலனால், இரும்பை யொத்த வலிவும் பொன்னை யொத்த பொலிவும் பெற்றுத் திகழ்கிறான்.

எடுத்தடிவைத்தால் மேல் மூச்சு வாங்கும் நிலையில் இருந்தவன், நான் தந்த மாமருந்தை உட்கொண்டதால், புலியை வேட்டையாடிக் கொல்லும் வீரம் பெற்றுவிளங்குகிறான், என்றெல்லாம், விவரம், விளக்கம் அளித்துவிட்டு, மருத்துவர் தம்மிடம் உள்ள மருந்து அபூர்வமான சக்தி வாய்ந்தது என்று சொன்னாலாவது, பரவாயில்லை பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலை, நான் அமைச்சராவதற்கு முன்பு, இத்துணை அலங்கோலமாக இருந்தது—நான் பதவியில் அமர்ந்த பிறகு, இந்த அளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது, என்றுஎடுத்துக்காட்டமுடிந்ததா? முடியுமா?

பிற்படுத்தப்பட்ட மக்கள் நான் அமைச்சராவதற்கு முன்பு கல்வித் துறையிலே, இத்துணை மோசமான நிலையில் இருந்தனர், நான் அமைச்சரான பிறகு, அவர்களின் நிலைமை இந்த அளவுக்கு உயர்ந்துவிட்டது! என்று காட்டினாரா? காட்டவில்லை! காட்டுவதற்கு ஒன்றும் இல்லை!

பிற்பட்ட மக்களுக்குச் சமூகத்தில் தரப்பட்டுள்ள இடம், அநீதி நிரம்பியதாக இருந்தது, நான் அமைச்சராகா முன்பு; இப்போது அவர்களின் நிலைமை உயர்ந்திருக்கிறது, என்றுகூற முடிகிறதா? அதுவுமில்லை! ஆனால், பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் காங்கிரஸ் தான் இரட்சகன் என்பதற்கு, அவர் காட்டும் ஆதாரம் என்ன?

வேறென்ன ஆதாரம் காட்ட வேண்டும், என்னைப்பாருங்கள்! என்றுதான் அவரால் கூறமுடியும்!

ஆனால், பிற்பட்ட வகுப்பினரின் பிரச்சினைக்குப் பரிகாரம் காணவும், அவர்களை முன்னேறச் செய்யவும் அதிகாரமோ, சட்ட பூர்வமான வாய்ப்போ பெறாமல், அமைச்சராக மட்டும் இருப்பதனால், பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு, என்ன பலன்? என்று கேட்டால் என்ன பதிலளிப்பார்?

ஆனால் யார் கேட்பார்கள்? கேட்பவர்களை, தேசத்துரோகி — காங்கிரஸ் விரோதி—என்று கூறினால், வாயடைத்துப் போகிறார்கள்; அதற்கா நமக்கு வழி தெரியாது! என்றெண்ணி மகிழ்கிறார்கள், இந்தத் தலைவர்கள்.

ஆனால், அமைச்சர்கள் இருவர் நம் வகுப்பினர் என்பதிலே இயற்கையாக எழக்கூடிய, எழவேண்டிய மகிழ்ச்சியால், அந்த வகுப்பு இளைஞர்கள் அனைவரும், மயங்கிக் கிடந்துவிடவில்லை; உண்மை அவர்கள் உள்ளத்தை உறுத்தத்தான் செய்கிறது; ஓரோர் சமயம் அவர்களால் தம் மனக்குமுறலை வெளியே கொட்டிக் காட்டாமலுமிருக்க முடியவில்லை. அதனாலேதான்,

"நாம் அன்று எந்த இலட்சியத்துக்காக பொதுக்கூட்டங்கள்போட்டு, ஊர்வலங்கள் நடத்தி, மாநாடுகள் கூட்டி, முரசு முழங்கினோமோ, அந்தக் கோரிக்கைகள் இன்று வரை கண்டோமில்லை"

என்று, 1—7—56ல் 'உழைப்பாளி' எழுதுகிறது.

"வன்னியர் முன்னேற்றத்திற்காகத்தான் மந்திரிப்பதவிவகித்து வருகிறேன் என்று மார்நிமிர்ந்து கூறும் நம் இனமந்திரியைக் கேட்கிறோம், நீங்கள் பதவியேற்று ஆண்டுகள் சில உருண்டோடியதே இதுவரை சாதித்தது என்ன?" என்று 'உழைப்பாளி' உரிமையுடன் இடித்துக் கேட்கிறது.

கைகண்ட மருந்து என்று வேறோரிடத்தில், அங்காடியில் கூவிக் கூவி விற்கிறார் அமைச்சர்.

ஊர்சுற்றிவருவதில் பயனென்றுமில்லை என்றும், 'இம்மாதிரி சூழ்நிலையை வளர விடுவது நம் சமூகத்திற்கே ஆபத்து, என்றும் 'இலவு காத்த கிளிபோல்' ஆகிவிட்டோம் என்றும், கோபம்,சோகம், திகைப்பு, கண்டனம், எனும் எல்லாவற்றையும்கொட்டிக்காட்டுகிறது, 'உழைப்பாளி'!

தம்பி! அரசியலில் இப்படிப் பட்ட மருத்துவர்கள் இடம்பெற்று விட்டால், பிணி குறையாததுடன், பிணி போக்கிக்கொள்ளும் முறையையும் மறந்துபோய், உழைப்பாளிகள் நோயாளிகளாகி நொந்துகிடக்க நேரிட்டுவிடுகிறது. நோய் தீர்க்கும் மருத்துவன் யார்? பிணி போக்கும் மாமருந்து யாது? என்பதைக் கண்டறிந்து பலன் காணுமுன்பு, நோய் என்ன? ஏன் ஏற்பட்டது? என்பதல்லவா தெரியவேண்டும்.

ஏழ்மை, அறியாமை, என்பவைகள், சமூகம் முழுவதிலும் கப்பிக் கொண்டிருக்கும் பிணி.

உழைப்பின் பலன் உலுத்தருக்குப் போய்ச் சேரும் விதமாக அமைந்துவிட்டிருக்கும் அக்ரமத் திட்டம்; மனதில் குருட்டறிவும் இருட்டு நிலையும் மூட்டப்பட்டுவிட்டதால் ஏற்பட்டுவிட்ட கேடு, ஏழ்மைக்கும் அறியாமைக்கும் காரணம்.

ஏழ்மை, அறியாமை எனும் பிணிபோக்கப்படவேண்டுமென்று பொதுவாகப் பேசி, பொதுவான பரிகாரம் தேடாமல், பொதுவான மருத்துவ முறையை நாடாமல்,

பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரச்சினை என்று, தனியாகக் கோடிட்டுக் குறிப்பிடப்பட்டு வருகிறதே, அதன் உட்பொருள் என்ன?

அதனை அறிந்துகொள்ள தம்பி, பிற்பட்ட வகுப்புப் பிரச்சினையையே ஆராயவேண்டும்.

பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ற பேச்சு — ஐரோப்பிய நாடுகளிலே அதிகம் அடிபடுவதில்லை.

மலை ஜாதி மக்கள்—நாடற்றவர்கள்—என்று சில சமயம் பேசப்படுவதுண்டு, ஆனால், பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ற பேச்சுக்கு அங்கெல்லாம் உள்ள சமூக அமைப்பு இடமளிப்பதில்லை—அப்படிப்பட்ட ஒரு நிலைமை அங்கெல்லாம் இல்லை.

'இந்தியா'வில்தான், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று சமூகத்தில் ஒரு பிரிவு காணப்படுகிறது; இந்தப் பிரிவும் மிகப் பெரிது.

தாழ்த்தப்பட்டோர், ஆதிவாசிகள், மலைஜாதியினர், நாடோடிக் கூட்டத்தார், என்போர்களைச் சேர்த்தல்ல பிற்படுத்தப்பட்ட வகுப்பார் என்று பேசுவது; இவர்களையும் நீக்கிவிட்டுப் பார்த்திடும் போதே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தொகை, மிகப் பெரிதாகக் காணப்படுகிறது.

இதனைக் கவனிக்கும்போது, இங்குள்ள சமூக அமைப்பின் அவலட்சணம் விளக்கமாகத் தெரியும்—வேதனையும் பிறக்கும்.

சமூகத்தில் மிகப் பெரும் அளவு மக்கள், பிற்படுத்தப்பட்டவர்கள்.

பிற்படுத்தப்பட்டவர்கள் என்றால், கல்வி, தொழில், சமூக அந்தஸ்து, பொருளாதாரம், அரசியலிலும் அலுவலகங்களிலும் இடம், எனும் இவைகளிலெல்லாம், பிற்படுத்தப்பட்டு, தாழ்நிலை தரப்பட்டு கவனிப்பாரற்று, ஓரவஞ்சனையாக நடத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டு உழல்பவர்கள் என்பது பொருள்.

உழைக்கவும் அதன் உறுபயனைப் பிறருக்குக் கொட்டி ஏமாறவும், உழைக்கவும் அதன் காரணமாகவே தாழ்நிலையில் தள்ளிவைக்கப்படவும், உழைக்கவும் அதனாலே, கல்வித் துறையில் முன்னேற, உத்யோகத் துறையிலே இடம்பெற, அரசியலில் அந்தஸ்து பெற இயலாமல், உழைத்துக் கிடப்பதற்காகவே படைக்கப்பட்டவர்கள் போன்றதோர் நிலை பெற்று நொந்து கிடப்பவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்.

உடலில் திடமுண்டு, உழைப்பில் தரம் உண்டு, உள்ளத்தில் திண்மை உண்டு, ஆனால் சமூக அமைப்பிலேயோ, இவர்களுக்கு, நாலாந்தர, ஐந்தாந்தர இடமும் தரப்படுவதில்லை.

உழைப்பின் பலனைக் கிடைக்கும் 'விளைவுகள்' அவ்வளவும், மேலும் மேலும் இவர்களைப் பிற்படுத்தப்பட்ட நிலைக்கு இறக்கி விடத்தான் செய்கிறதே தவிர உழைத்தனர், உயர்ந்தனர், என்று பேசத்தக்க நீதியான நிலை ஏற்படச் சமூக அமைப்பு இடம்தரவில்லை.

நல்ல உழைப்பாளி! — என்று பேசும்போது, பாராட்டுகிறார்கள் என்று பொருள் அல்ல, எஜமானர்கள் தம் ஊழியர்களின் 'சேவை' கண்டு மகிழ்கிறார்கள் — தட்டிக் கொடுக்கிறார்கள், என்றுதான் பொருள்.

இந்த வேதனையை, தலை தலைமுறையாக பல நூற்றாண்டுகளாக அனுபவித்துக்கொண்டு இருப்பவர்கள், இன்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், என்று அழைக்கப்படுபவர்கள்.

அவர்களிடம் உள்ள தொழில் திறமை — கைவண்ணம் — அவர்கட்கு, சமூகத்தில் உரிய இடத்தைப் பெற்றுத் தருவதில்லை, 'ஜாதி முறை' தான், அவர்களுக்கு இன்னதுதான் இடம், என்று நிர்ணயிக்கிறது.

அரசிளங் குமரியின் அழகுக்கு அழகு தரும் அற்புதமான நவரத்ன மாலை செய்தளிக்கவல்ல தொழில் திறமை இருக்கலாம்—ஆனால் அந்தத் திறமையை அளவுகோலாகக் கொண்டோ, அந்தத் தொழிலால் சமூகம் பெறக் கூடிய பயனை அளவுகோலாகக் கொண்டோ, அந்தத் தொழிலில் ஈடுபட்டவனுக்கோ—அந்த வகுப்புக்கோ இடம் அளிக்கப்படுவதில்லை—அந்த வகுப்புக்கு உரிய இடம் இது என்று, ஜாதி முறை குறிப்பிட்டு, சமூகச் சம்பிரதாயமும் அதற்கு அரணாக அமைந்த சட்டமும் எந்த இடத்தைத் தருகிறதோ, அதுதான், அந்த வகுப்பினருக்குக் கிடைக்கிறது.

கடினமான உழைப்பினைத் தந்து, சமூகம் நிலைக்கவும், வளரவும், நேர்த்தி பெறவும் தேவைப்படுகிற தொழில்கள் செய்துவரும் உழைப்பாளர்கள், பிற்படுத்தப்பட்ட நிலைக்கு வைக்கட்டு, இந்தச் சூதான திட்டத்தைக் கண்டறிந்ததிலும், நிலைநாட்டினதிலும், பாதுகாப்பதிலும் மட்டும் தலைமுறை தலைமுறையாகத் திறமையைக் காட்டி வந்தவர்கள், முற்போக்கு வகுப்பினராகவும் இருந்துவரும், மோசமானதோர் சமூக அமைப்பு, இங்கு இருப்பதுபோல, வேறு எங்கும் இருந்திட, அனுமதித்ததில்லை.

ஆனால், இங்கு அத்தகைய அக்ரமமான, அநீதி நெளியும் அமைப்பு நீண்டகாலமாக இருந்து வருவதற்குக் காரணம், ஜாதி முறையில் ஆழ்ந்த நம்பிக்கை அனைவருக்கும் புகுத்தப்பட்டிருப்பதாகும்.

அந்த நம்பிக்கை ஆழப் பதிந்ததற்குக் காரணம், இந்த ஜாதி முறை என்பது, சுகபோகியாவதற்கு வழிகாண விரும்பிய சூதுக்காரன், எதற்கும் தலையாட்டும் போக்கினர்மீது சுமத்திய சூழ்ச்சித் திட்டம் என்ற தெளிவு, நெடுங்காலமாக ஏற்படாததாகும்.

ஜாதி முறை என்பது கடவுளின் ஏற்பாடு, என்று மக்களிடம் பேசப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டதால், இந்தத் தெளிவு ஏற்படவில்லை.

கடவுள் எனும் புனிதம், எத்தகைய அக்ரமமான காரியத்துக்குப் பயன்படுத்தப்பட்டது என்பதை எண்ணும்போது, எவருக்கும் மன அதிர்ச்சி ஏற்படாமலிருக்க முடியாது.

கடவுள் எனும் புனிதத்தைப் பயன்படுத்தி இந்தச் சூழ்ச்சிக் காரியம் நடைபெற்றுக்கொண்டு வந்ததால், இந்தச் சூழ்ச்சித்திட்டத்தை, எதிர்ப்போர் கடவுட்கொள்கைக்கு எதிரிகள் என்று கூறி அழித்திட, சூழ்ச்சிக்காரர்களுக்கு எளிதாக முடிந்தது.

நமக்கேன் இந்தப் பகை என்ற அச்சம் காரணமாகப் பலரும்,

இந்த அக்ரமத்தினைக் கண்டிக்காமலிருந்துவிட்டனர்.

பல பொருள் உணர்ந்தோரே, இதனைக் கண்டிக்காத காரணத்தால், இது மெத்தச் சரியான, தேவையான, தூய்மையான திட்டம் போலும் என்ற எண்ணம் வெகுவாகப் பரவிற்று.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரே கூட இந்த மனமயக்கத்துக்கு ஆளாயினர்—தமக்குச் சமூகத்தில் அளிக்கப்பட்டிருக்கும் இடம் அநியாயமானது என்ற உணர்வு பெறவும் முடியாமலிருந்தது.

மேலும் அவர்கள், தமக்குள் ஒருவருக்கொருவர், தரம் பார்த்துக்கொள்ளவும், உயர்வு தாழ்வு பேசிக்கொள்ளவும் தலைப்பட்டு, மொத்தத்தில் இழைக்கப்பட்டுள்ள அநீதியை எதிர்த்திட ஆர்வம் காட்டாமல், தமக்குள் 'மேல் கீழ்' பேசிக் கிடக்கவும், ஏசி மோதவும் தலைப்பட்டனர்.

மக்களாட்சியின் மாண்பினை உணர்ந்தவர்களும், மேனாடுகளில் உள்ள சமூக அமைப்பு கூடுமான வரையில் நீதி நிலவ வழி செய்கிறது என்ற உண்மையைத் தெரிந்தவர்களும், இங்கு அரசியல் நடவடிக்கைகளிலே ஈடுபட்ட போதுதான், **வகுப்பு நீதி — வகுப்புவாரி பிரதிநிதித்துவம்** என்ற முறைகளைப்பற்றிப் பேசலாயினர்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு விழிப்புணர்ச்சி ஏற்படலாயிற்று.

அதன் பயனாக, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தத்தமது வகுப்பின் சக்தியைத் திரட்டவும், அந்தச் சக்தியை அரசியலுக்குக் கருவியாக்கிக் கொள்ளவும், முற்பட்டனர்.

சென்ற தேர்தலின்போது, இந்தக்'கருவி' மிக நன்றாகப் பயன்பட்டது.

ஜஸ்டிஸ் கட்சி, மொத்தமாக பார்ப்பனர் — பார்ப்பனரல்லாதார் என்று சமூக அமைப்புத் திட்டத்தைக் கவனித்து, அதற்கேற்றபடி, தன் அரசியல் முறைகளை அமைத்தது.

வகுப்பு நீதி-வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்ற திட்டங்கள் அமுலுக்கு வருவதற்கான சூழ்நிலையை ஜஸ்டிஸ் கட்சி உருவாக்கிற்று. அதுவும் போதுமானதல்ல என்பது மெள்ள மெள்ள, ஆனால் நிச்சயமாக உணரப்பட்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குறித்த திட்டம் உருவாகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

ஜஸ்டிஸ் கட்சிக்கு, இந்தத் திட்டத்தை உருவாக்கி, அமுலாக்குவதற்கான வாய்ப்புத் தரப்படவில்லை-இதற்கிடையில், காங்கிரஸ், சர்க்காரை நடத்தும் கட்சியாகிவிட்டது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரச்சினையை, காங்கிரஸ் கட்சி கவனிக்க மறுத்தது.

கவனிக்க வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்குக் காங்கிரசின் செல்வாக்கு, நிகரற்றதாக அப்போது இருந்தது.

அத்தகைய, செல்வாக்கு காங்கிரசுக்கு இருந்ததற்குக் காரணம், நாட்டு மக்களிடம், பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார்; பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்; என்பன போன்றவைகளெல்லாம், அற்பமான பிரச்சினைகள்—யாரோ சிலருடைய பதவி ஆசையைப் பூர்த்தி செய்யும் காரியம், மக்களுக்கு அது அல்ல உயிர்ப் பிரச்சினை; உயிர்ப் பிரச்சினை, வெள்ளைக்கார ஆட்சியை விரட்டிவிட்டுச் சுயராஜ்யம் பெறுவதுதான், என்று எடுத்துக் கூறப்பட்டது.

நாடு, அடிமைப்பட்டிருப்பதை உணர்ந்து, அந்த இழிநிலையைப் போக்கித் தீரவேண்டும் என்ற 'தேசீய' உணர்வு பெற்ற மக்கள், இந்த வாதத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

வகுப்புப் பிரச்சினைகளைக் கவனிப்பது, சிறுமைத்தனம், சீரழிவு, தேசத் துரோகம், என்று கருதினர். எனவே, காங்கிரஸ், அந்தப் பிரச்சினையை, 'குப்பைக் கூடை'க்கு அனுப்பிவிட்டு, தன்னிகரற்ற செல்வாக்குடன், கொலுவிருக்க முடிந்தது. இந்தச் செல்வாக்கு நிலைத்திருக்க முடியாதது, சிதையலாயிற்று. சென்ற தேர்தலில் இதற்குச் சான்று கூறுவது போன்ற சம்பவங்கள் பல நடைபெற்றன.

பிற்பட்ட வகுப்பினரின் நம்பிக்கையைப் பெற்ற தலைவர்கள் பலர், காங்கிரசை முறியடித்தனர்; காங்கிரஸ் கட்சி சார்பிலேயே நின்று வெற்றிபெற்ற சிலரும், பிற்படுத்தப்பட்ட வகுப்பின்செல்வாக்கைத் துணைகொண்டே வெற்றிபெற முடிந்தது.

பிற்பட்ட வகுப்பினரிடையே ஏற்பட்ட இந்த அரசியல் எழுச்சியைக் கண்ட பிறகுதான், காங்கிரஸ் கட்சி, அருவருப்புடன் பேசி அலட்சியப்படுத்திவிடத்தக்க பிரச்சினை அல்ல இது என்பதை அறிந்தனர்; அறிந்தவர்கள், பிற்பட்ட வகுப்பு மக்களை முன்னேற்றமடையச் செய்ய என்ன வழி என்று நல்லெண்ணத்துடன் திட்டம் வகுக்கவில்லை; மாறாக, பிற்படுத்தப்பட்ட வகுப்புக்கான பணியாற்றுவதாகக் கூறி, அவர்களின் நம்பிக்கையைப் பெற்று, சட்டசபைக்குள் நுழைந்துள்ள வகுப்புத் தலைவர்களை எப்படி வலைபோட்டுப் பிடிப்பது என்ற தந்திரத் திட்டம் வகுத்தனர்.

வழக்கப்படி, இத்தகைய தந்திரத்தில் ஆச்சாரியார் வழி காட்டினார்; மாணிக்கவேலர் கிடைத்தார்.

காமராஜர், அதே திட்டத்தைப் பின்பற்றினார், S. S. இராமசாமி கிடைத்தார்.

அமைச்சர் அவைக்கு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் இருவர் கிடைத்தனர்.

அப்படிக் கூறுவதைவிட, பிற்படுத்தப்பட்ட வகுப்பின்பேரால், இருவர் அமைச்சர்களாயினர் என்பதுதான் பொருந்தும்.

இவர்கள் அமைச்சர்களாக்கப்பட்டதும், பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பிரச்சினை தீர்ந்துவிட்டதா என்பதே இப்போதுள்ள பிரச்சினை; பிற்படுத்தப்பட்ட வகுப்பு இளைஞர்கள் தீவிரமாக எண்ணிப் பார்க்கவேண்டிய பிரச்சினை.

இதைப்பற்றி எண்ணுவதற்குத் துணைபுரிவதற்காக, ஒரு உண்மையை அவர்கட்கு எடுத்துக் காட்டவேண்டி வருகிறது.

குறிப்பிடப்பட்ட, இரு அமைச்சர்களும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்தைக் கவனித்துக்கொள்வதற்காக அழைக்கப்பட்டவர்கள் அல்ல. மாணிக்கவேலர் வரி வசூலிக்கவும், எஸ். எஸ். இ.ராமசாமி 'ஸ்தலஸ்தாபன'ங்களை ஆளவும் அழைக்கப்பட்டனர்; பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு முன்னேற்றம் அளிக்கும் வசதி, வாய்ப்பு, உரிமை, ஏதும் அவர்களிடம் தரப்படவில்லை.

எனவே, இருவரும், பிற்படுத்தப்பட்ட மக்களின் திரண்டெழுந்த சக்தி காரணமாக, அமைச்சர்களாக முடிந்ததே தவிர, பிற்படுத்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கான வழி வகுக்கும் பொறுப்பைப் பெறவில்லை.

எனவே, இவர்கள் இருவரும் அமைச்சர்களான காரணத்தால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடவில்லை.

அதற்கான வழியேகூட ஒரு வகையில் அடைபட்டுப் போய்விட்டது, என்று கூறலாம்.

இந்த இருவரும், அமைச்சர்களாகாமல் வகுப்புத் தலைவர்களாக இருந்துவந்த போதாவது, பிற்பட்ட வகுப்பினருக்கு உற்ற குறைகளை எடுத்துக்கூறவும், கிளர்ச்சி நடத்தவும், சர்க்காரை வற்புறுத்தவும், வழி இருந்தது.

இவர்களே அமைச்சர்களாகிவிட்டதால் அந்த வழியும் அடைபட்டுப் போய்விட்டது!

இவர்களும் "தேசீயம்" பேசஆரம்பித்துவிட்டனர்!

உழைப்பாளர் கட்சியும், பொதுநலக் கட்சியும், கலைக்கப்பட்டுவிட்டது — எல்லாம் காங்கிரசில் கரைக்கப்பட்டுவிட்டது என்று, இரு தலைவர்களும் கூறும் அளவுக்கு அந்தத் 'தேசீயம்' முற்றிவிட்டது.

அந்தத் 'தேசீயம்' பேசும் போக்கில்தான், அமைச்சர் S. S. இராமசாமி, பிற்படுத்தப்பட்ட மக்களின் இரட்சகன், காங்கிரஸ்தான்! பொதுத் தேர்தல் வருகிறது, பிற்படுத்தப்பட்ட மக்களே! காங்கிரசை ஆதரியுங்கள், என்று பேசி இருக்கிறார்.

அமைச்சர் இவ்விதம் பிரதாபம் பேசுகிறார், ஆனால் வன்னிய குலத்தவர் காங்கிரசின் சேவை குறித்தும், அமைச்சர்போன்றார் குறித்தும், என்ன கருதுகின்றனர்?

"எல்லாம் பேச்சளவிலேதான்; செயலளவில் ஒன்றும் பலனில்லை. இதைக் கண்டு நம்மால் போற்றிப் பாராட்டி அனுப்பிய தலைவர்கள், அவர்களின் சுயநலத்திற்காக அவர்கள்கைக்கொண்ட முறையைப் பின்பற்றும் நம்மையும் எங்களோடு நாங்கள் சேர்த்துள்ள கட்சியில் சேருங்கள் என்று நமக்கு வேறு புத்தி கற்பிப்பதுடன், தனக்கு ஒரு கண் போனதால் மற்றவர்களுக்கும் கண் போகட்டும் என்பதுபோல் உபதேசம் செய்ய முற்பட்டதைத்தவிர நாம் கண்ட பலன் யாது என்பதை மனவேதனையுடன் கேட்கின்றோம்."

'உழைப்பாளி'யில், பட்டம்மாள் என்றோர் அம்மையார் இதுபோல எழுதுகிறார்.

வகுப்பின் பெயர்கூறிக்கொண்டு சட்டசபை சென்ற 'தலைவர்கள்' தங்கள் சுயநலத்தைத்தான் கவனித்துக் கொண்டார்கள்—என்று மனவேதனையுடன் அந்த அம்மையார் கூறவேண்டிய நிலைமை இருக்கிறது.

"மக்களின் ஓட்டைப்பெற்றுச் சட்டசபைக்குச் சென்று பச்சோந்தியைப்போல் நிறத்தை (லேபிலை) மாற்றிக்கொண்டு" என்றும், 'என் பதவிக்கு ஆபத்து வரும், என் வருவாய் போய்விடும்' என்றெல்லாம் சாக்குப் போக்கு சொல்லியது தவிர நாம் கண்ட பலன் என்ன?—என்றும் கேட்டுள்ளார்.

சுயநலம்—பச்சோந்திக் குணம்—பதவிப் பாசம்—என்பவைகளுடன், "புதுச்சேரி பொம்மைகள்" போல சட்டசபையில் கொலுவிருக்கிறார்கள் என்றும் கேலி செய்திருக்கிறார்.

இந்த நற்சான்று கிடைக்கிறது மருத்துவருக்கு—ஆனால் அவரோ என் மருந்து கைகண்டது—என்று கூவிக் கூவி விற்கிறார் — பிற்பட்ட வகுப்பினர் அனைவருமே இதை உட்கொள்ளலாம் என்று 'சிபாரிசு' செய்கிறார்!

தம்பி! சாதித்தது என்ன? என்ற தலைப்பில் இரா. வீரசம்பு என்பார், 'உழைப்பாளி' 1—7—56 இதழில் தந்துள்ள கட்டுரையில் உள்ள காரசாரமான பகுதியை வேறோர் இடத்தில் அடிகள் வெளியிட்டிருக்கிறார்—படித்துப் பார்.

நம் வகுப்பு மந்திரியை நம் வகுப்புத் தோழனே இப்படி சந்தி சிரிக்கச் செய்யலாமா என்று வேண்டுமானால், கட்டுரையாளர் மீதோ இதழாளர் மீதோ பெரிய இடம் கோபித்துக்கொள்ளுமே தவிர, இதிலே குறிப்பிட்டுள்ள எந்த விஷயத்தை, ஆதாரம், புள்ளி விவரம் காட்டி, மறுக்கமுடியும்?

உண்மையிலேயே, இலவுகாத்த கிளிபோல்தான் ஆகிவிட்டது. ஐயமில்லை! ஆகவேதான், பிற்பட்ட வகுப்பு இளைஞர்கள் மீண்டும் மீண்டும், ஏமாற்றத்துக்கு ஆளாகாமலிருக்கத்தக்க முறையைக் கண்டறியவேண்டும்.

வகுப்புத் தலைவர்கள், வகுப்பு, நலன்குறித்துப் பேசுவது கேட்டுப் பூரிப்படைந்து, அவர்கள் தங்கள் வாக்குறுதிகளை மறந்து, கட்சி மாறும்போது திகைப்படைந்து, அவர்கள் உயர்பதவி பெற்றது கண்டு உள்ளூர மகிழ்ந்து, அந்த உயர்வு, வகுப்பு முன்னேற்றத்துக்கு வழிகோலாதது கண்டு மனம் உடைந்துபோவதுதானா, இளைஞர் கடமை!!

பிற்பட்ட வகுப்பினரின் முன்னேற்றம், அதிலே ஒருவரிருவர் உயர் பதவியில் அமருவதால் ஏற்பட்டுவிடாது என்று அவர்கள் அறிந்துகொண்ட உண்மையை இனமக்கள் அறியும்படி செய்ய வேண்டிய கடமை அந்த இளைஞர்களுக்கு இல்லையா? திறம் இல்லையா?

பிற்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்துக்கான தனியானதோர் திட்டம் காணவும், அதற்கான பணவசதியைப் பெறவும், சட்டபூர்வமான திட்டம் தீட்ட, பிற்பட்ட வகுப்புத் தலைவர்கள் ஒன்றுகூடிடவேண்டாமா? காங்கிரசுக்குள் சென்று 'குடித்தனம்' நடத்த ஆரம்பித்துவிட்டால், இந்தக் காரியம் செய்யும் ஆற்றலை எப்படி அவர்கள் இழக்காமலிருக்க முடியும்!

விதை நெல்லை வேகவைத்துத் தின்றுவிட்டால் வயலில் தூவ நெல் எங்கிருந்து பெறுவது? அம்பை ஒடித்து மாடோட்டும் தார்குச்சியாக்கிவிட்டால், வில் வைத்துக்கொண்டு என்ன சாதிக்க முடியும்?

பிற்பட்ட வகுப்பினரின் நிலைமை சகல துறைகளிலும் முன்னேற்றம் அடைவதற்கான சட்டபூர்வமான திட்டத்தைப் போராடிப்பெற வேண்டிய தலைவர்கள், வகுப்பு முன்னேற்றம் தானாக வருகிறபோது வரட்டும், முதலில் எங்கள் முன்னேற்றத்துக்கு வகை செய்து தாருங்கள் என்று ஆளும் கட்சியிடம் கொஞ்சவும், கெஞ்சவும், முற்பட்டபோது வகுப்பு இளைஞர்கள் மட்டும் சிறிதளவு விழிப்புணர்ச்சியுடன் இருந்திருந்தால் தம்பி, இலவு காத்த கிளியானேமே! பச்சோந்திகளாகிவிட்டார்களே! புதுச்சேரிப் பொம்மைகளாக இருக்கிறார்களே! என்றெல்லாம் கூறித் துக்கிக்கவேண்டிய சூழ்நிலையே ஏற்பட்டிராது.

இப்போது மனம் குமுறிப் பேசினாலும் எழுதினாலும், அமைச்சர்களாகிவிட்ட குலப் பெரியவர்கள், எங்களுக்கு உங்கள் ஆதரவு தர முடியாது என்றால்கூட நாங்கள் அச்சம்கொள்ளமாட்டோம், ஏனெனில், எங்களுக்கு வேலை செய்ய காங்கிரஸ் கட்சியே காத்துக் கிடக்கிறது என்றல்லவா சொல்லுவார்கள்!!

எனவே, பிற்பட்ட வகுப்பிலே உள்ள இளைஞர்கள், அந்தப் பிரச்சினையை நன்கு ஆராய்ந்தறிந்து, தலைவர்களின் தந்திரத்துக்கும், ஆசை வார்த்தைக்கும், வகுப்பின் பெயர்கூறி ஊட்டும் மயக்கத்துக்கும் மக்கள் பலியாகாமற் பார்த்துக்கொள்ளவேண்டும். இதில் இளைஞர்கள் வெற்றிபெறமுடியாது போனால், நீண்டகாலத்துக்கு, பிற்பட்ட வகுப்பின் பெயர் கூறிக்கொண்டு தலைவர்கள் ஆவர்; மந்திரிகளாவர்; கட்டுரையாளர் கூறுவதுபோல, இனமக்கள் என்றும்போல் சுமைதாங்கிகளாகவே இருப்பர்; மந்திரிகளானவர்கள், பச்சோந்திகளாயினும், பளபளப்புடன் பவனி வருவர், பலன் பெறுவர், புதுச்சேரிப் பொம்மைகள் என்று கேலி பேசினாலும், கவலைப்படமாட்டார்கள்; இனமக்களின் நிலைமையோ 'இலவு காத்த கிளி' யாகத்தான் இருக்கும்.

பலன் எந்த அளவுக்கு ஏற்படும் என்பதுபற்றியும், நமக்குக் கிடைத்திடக்கூடிய வசதி எத்தகையதாக இருக்கும் என்பது குறித்தும், கவலையற்று, நாம், தம்பி, இந்தத் தேர்தலின்போது, இந்த உண்மைகளை ஊரறியச்செய்யவேண்டும்.

பிற்பட்ட வகுப்பினர் பிரச்சினைக்குப் பரிகாரம் என்ன என்ற உண்மையை எடுத்துரைத்து, பிற்பட்ட வகுப்பினருக்கு உரிமையும் நல்வாழ்வும் பெற்றுத் தருவதாக வாக்களித்தவர்கள், போக்கு எப்படி மாறிவிட்டது என்பதை எடுத்து விளக்கி, அடுத்த சட்டசபையிலேனும், பிற்பட்ட வகுப்பினரின் உரிமைக்காக, நலனுக்காக, பாதுகாப்புக்காக, ஆளும் கட்சியின் புன்னகைக்கு மயங்காமல், கோபம் கண்டு அஞ்சாமல், வாதாடக்கூடிய, போராடக்கூடிய, தூய்மையும் ஆற்றலும்கொண்ட பிற்பட்ட வகுப்பு இளைஞர்கள் ஒரு சிலராவது இருந்தால்தான் பிற்பட்ட வகுப்பைப் பிடித்துக்கொண்டுள்ள பிணி நீங்குமேயொழிய, பிற்பட்ட வகுப்பின் பிணி தீர்க்கும் மாமருந்து காங்கிரஸ் ஒன்றுதான் என்று வாணிபம் நடாத்துவோரால் நிச்சயமாக முடியாது; முடியவே முடியாது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பில், ஆற்றல் மிக்கவர்கள், தியாகிகள், வீரர்கள், இருக்கிறார்கள்.

நாடு ஆளும் தகுதியும் திறமையும் அவர்களிடம் இருக்கிறது; நிரம்ப இருக்கிறது.

ஆனால் அவர்கள் காங்கிரஸ் கூடாரத்தில் குடிபுகுந்துவிட்டால், இனம் குறித்து பேசவும், இன முன்னேற்றத்துக்கான திட்டம் தேடவும், முடியாது அனுமதி கிடையாது! எனவேதான்,

பச்சோந்திகளாய்

புதுச்சேரிப் பொம்மைகளாய் இருக்கவேண்டி நேரிட்டுவிடுகிறது.

எனவேதான், தம்பி, கொடிகட்டி ஆளும் கட்சியில் கோடீஸ்வரர்களும் கோலெடுத்துத் தாக்க வருவோரும், இருப்பது தெரிந்தும் ஒடுக்கப்பட்டோர் நசுக்கப்பட்டோர் ஒதுக்கிவைக்கப்பட்டோர் சார்பில் பேசும் ஜனநாயகக் கடமையை நாம் மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், தேர்தலில் ஈடுபடத் திட்டமிட்டிருக்கிறோம்—வெற்றிபெற்று விடுதலைத் திட்டம் பிரகடனம் செய்துவிடப்போகிறார்களோ இந்த சூரப்புலிகள் என்று வீராவேசமாகக் கேட்கின்றனர் வெந்த மனதினர் தமது நொந்துபோன நிலையினை நாடு கண்டறியலாகாதே என்ற எண்ணத்தால் —கேட்கட்டும் தம்பி, அதனால் என்ன!

நமது கடமையை நாம் செய்வோம், மக்களுக்கு, உண்மையான உழைப்பாளர்கள், உறுதிபடைத்த வாதாடுவோர், குறுக்குவழி செல்லாதவர்கள் தேவை என்றால் நம்மை ஆதரிக்கட்டும்! இலவு காத்த கிளியானோம் என்று இன்று மனவேதனைப் படுகிறார்களே இந்த உண்மைகளை எல்லாம் எடுத்துச் சொல்லிக்கேட்போம், உண்மையை மக்கள் உணரும்படிச் செய்வதற்கேற்ற ஆற்றல் வெற்றி பெற்றால் வெற்றி கிடைத்தே தீரும்; இல்லையென்றாலும், நஷ்டம் நமக்கல்ல, நாட்டுக்கு என்று மன அமைதிகொள்ளவும் நமக்குத்தெரியும். இனி என்ன கவலை! தம்பி! இலவுகாத்த கிளி போன்ற நிலைமையில், வன்னியர் மட்டுமல்ல, பொதுவாகப் பிற்பட்ட வகுப்பு மக்கள் அனைவருமே அதே நிலையில் தான் இருக்கிறார்கள். அவர்களிடமெல்லாம், உண்மைகளை எடுத்துரைக்கும் பணியினைத் தொடர்ந்து செய்துகொண்டு வருவோம்; பெரியார் அடிக்கடி சொல்லுவார் கவனமிருக்கிறதா, தம்பி, ஊதுகிற சங்கை ஊதுவோம், விடிகிறபோது விடியட்டும் என்று, அதைவிடச் சற்று அதிகமான நம்பிக்கை கொள்ளக்கூடிய விதமான அறிகுறிகள், நம்பிக்கை தரும் நிலைமைகள் நாட்டில் தென்படத்தான் செய்கின்றன; எனவே, நமது பணி, ஆர்வமும் எழுச்சியும் கொண்டதாகவே அமைந்திருக்கிறது.

அன்பன்,

அண்ணாதுரை

ஊமையாய், பாவையாய்..!

தி. மு. கழகத்தார், தேர்தலில் ஈடுபட இருக்கிருர்கள் — அதனுலே, கண்டபடி காங்கிரஸ் சர்க்காரைக் கண்டித்து வருகிருர்கள் — அவர்கள் பேச்சுக்குக் காது கொடுக்காதீர்கள் என்று காமராஜர் ஊரூராகச் சுற்றிக் கூறிவருகிருர்.

சென்னை, காங்கிரஸ் சர்க்கார் மீது தி. மு. கழகம் வீண்பழி சுமத்துவதாகக் கூறும், காமராஜர் பார்வைக்கு அன்பர்கள், இந்தக் கட்டுரையைக் கொண்டுவரக் கேட்டுக்கொள்கிரேும்.

தேர்தலில் நிற்பவர்கள் — காங்கிரசின் விரோதிகள், என்று குறைகூற முடியாத இடத்திலிருந்து கிடைக்கும் 'பரிசு' இது!

சென்னை காங்கிரஸ் சர்க்காரின் போக்குக்குக் கண்டனம்!

டில்லி சர்க்காரின் பாரபட்சத்துக்கும் கண்டனம்!

ஊமையா? பாவையா? என்று சென்னை காங்கிரஸ் சர்க்காரை இடித்துக் கேட்கிருர் ஆசிரியர்.

ரங்கூனிலிருந்து, வெளியிடப்படும் **ரசிக ரஞ்சனி** என்னும் இதழின் 6—7—56 தலையங்கத்தில் காணப்படும் 'மணிவாசகம்' இங்கு தரப்பட்டிருக்கிறது.

கடல் கடந்து பரவி நிற்கும் கீர்த்தியின் இலட்சணத்தைக்காமராஜருக்குக் காட்டுங்கள்!

தி, மு. கழகம்தான், தேர்தல் ஆசை பிடித்துக்கொண்டு 'பழி' சுமத்துகிறது, ரங்கூனிலிருக்கும் ரசிக ரஞ்சினிக்கு, என்ன கோபம் காமராஜர் ஆட்சிமீது, என்று எண்ணிப் பார்த்திடச் சொல்லுங்கள்.

ரசிக ரஞ்சினி கழக ஏடு அல்ல; பெயரே கூறும், விளக்கமும் தேவையில்லை.

*

"இந்தியாவுக்கும் அந்தமானுக்கு மிடையே சென்றுவர இந்திய சர்க்கார் 2 லட்சத்து நாற்பதாயிரம் பவுனுக்கு கிரயமாக புதிய கப்பல் ஒன்றை விலைக்கு வாங்கியுள்ளனர்". என்ற ஒரு செய்தி புதிய டெல்லியிலிருந்து வெளியாகியுள்ளது. அம்மார்க்கத்து போக்குவரத்து பிரயாணிகளுக்கு சந்தோஷத்தை விளவிக்கக்கூடிய இச்செய்தி பர்மாவாழ் தமிழ் மக்களுக்கு மிகுந்தஆச்சர்யத்தை கிளப்பிவிட்டுள்ளது. தமது பிரயாணிகள் விஷயத்தில் இந்திய சர்க்கார் ஜரூரான கவனம் செலுத்தத்தானே செய்கின்றனர் என்று அதிசயப்படவும் நேரிடுகின்றது.

சுமார் நூற்றுக்கணக்கில் இந்தியாவுக்கும் அந்தமானுக்குமிடையே போக்குவரத்து நடத்திக்கொண்டிருக்கும் பிரயாணிகளுக்கு ஒரு கப்பல் போதவில்லையென இந்திய சர்க்கார் மற்றுமொரு புதிய கப்பலை சுமார் இரண்டரை லட்சம் பவுன் விலை கொடுத்து துரிதமாக வாங்கி இரண்டு கப்பல்களை இம்மார்க்கத்தில் போக்குவரத்து நடத்த ஏற்பாடு செய்தனரே, ஆயிரககணக்கில் பிரயாணிகளின் போக்கு வரத்து நடந்துகொண்டிருந்த இரங்கூன்-சென்னை கப்பல் போக்கு வரத்து தடைப்பட்டுப்போன விஷயத்தில் இதே இந்திய சர்க்கார் அலட்சிய மனப்பான்மையுடன் இருப்பது ஏன்? இம்மார்க்க போக்குவரத்தைத் துரிதமாக திரும்ப ஆரம்பிக்காமல் நொண்டிச் சமாதானம் சொல்லிக்கொண்டே வருவதும் ஏன் என்பதுதான் பர்மா வாழ் தமிழர்களின் சென்னை-இரங்கூன் கப்பல் போக்குவரத்துப் பிரயாணிகளின்-ஏழை எளிய உழைப்பாளிகளின் உருக்கமான கேள்வியாகும்.

நமது இந்திய சர்க்கார் சென்னை மாகாண மக்கள் பிரச்சினையில் பாரபட்சமாக நடந்து கொள்கின்றனரா? சென்னை மாகாண மக்களை பர்மா வாழ் தமிழ் மக்களை அலட்சியமாக நினைக்கின்றனரா? அல்லது, மேற்கு வங்காள சர்க்காருக்கும் அதன் மக்களுக்கும் பயந்துதான் அவர்கள் விஷயத்தில் இந்திய சர்க்கார் விசேஷ சலுகையும் துரிதமாக நடவடிக்கையும் எடுத்துக்கொணடனரா?

இந்திய சர்க்கார் தமது பிரஜைகள் பிரச்னைகளில் பாரபட்சமாக நடப்பவர்கள் அல்லவெனில்; இரங்கூன் — சென்னை மாகாண பிரயாணிகள் விஷயத்தில் இச்சர்க்கார் கண்ணையும் காதையும் மூடிக்கொண்டிருப்பது தான் ஏன்?

சென்னைமாகாண சர்க்கார் ஊமைகளாகவும் பாவைகளாகவும் தொடர்ந்து இருப்பதுவும் அழகல்ல. அந்தமானுக்கு இரண்டு கப்பல்கள் போய் வரும்படி மேற்கு வங்காள சர்க்கார் செய்ய இயலும் போது, சென்னைக்கும் — இரங்கூனுக்குமிடையே மாதத்திற்கு ஒரு கப்பலாவது நிரந்தரமாக போக்கு வரத்து நடத்தும்படி சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்த இயலவில்லையெனில், தமது மாகாண மக்களுக்கு இந்த உதவியைக்கூட புரிய இயலாத இச் சர்க்கார் கையாலாகாத பொம்மை சர்க்காரா? சென்னை மாகாண மக்களுக்கென இவ்வித ஒரு சர்க்கார் இருந்துதான் என்ன பிரயோஜனம் என்றுதான் கேட்க விரும்புகிரேும். அமைதியான இக் கேள்வி நம் நாட்டு சர்க்கார் செவிகளில் ஏறுமா? அல்லது......

★

திருமண அழைப்பு

வள்ளுவராண்டு 1987, ஆவணித் திங்கள் 4-ம் நாள் (19-8-56) ஞாயிற்றுக் கிழமை காலை 9-மணி அளவில் என் மகன் செல்வன் காங்கயனுக்கும், செல்வி மங்களம்மாளுக்கும் பேளுக்குறிச்சி எனது இல்லத்தில் சி. என். அண்ணாத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற விருக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்கு தாங்கள் வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,

ஜி. பி. சோமசுந்தரம்,

பேளுக்குறிச்சி.

செயலாளர், சேலம் மாவட்ட தி. மு. கழகம்.

"சர்டிபிகேட்!"

சிறைக்கு இழுத்துச் செல்லப்பட்டார்கள்! எதிர்க்கட்சிக்காரர்களல்ல, காங்கிரஸ்காரர்கள்.

ஆச்சரியம் அலைமோதும், ஆள்வது காங்கிரஸ் சர்க்கார், அது தனது கட்சிக்காரர்களையே இழுத்துக்கொண்டு போயிற்று என்று.

சாதாரண காங்கிரஸ்காரர்கள் அல்ல, அவர்கள், தியாகிகள். வெள்ளையனை எதிர்த்துப் போராடியபோது, தடியடியும், சிறைவாசமும் பெற்றவர்கள்—குடும்பம் எக்கதியாயினும் கவலையில்லை, நாடே நமது பெருங்குடும்பம், அதனை அந்நியன் பிடியிலிருந்து விடுவிக்கவேண்டும் எனும் ஆர்வத்தால், அவர்கள் ஏற்ற இன்னல்கள் பல, பெற்ற தழும்புகள் ஏராளம்.

வெள்ளையன் போய், ஆள்கிறது காங்கிரசு ஆட்சி! அதிலும் தொண்டர் தம் தோழர் என்று கூறப்படும், காமராசர் ஆள்கிறார்—அவரது அரசு, தியாகிகளை இழுத்துக்கொண்டுபோகிறது, போலீஸ் ஸ்டேஷனுக்கு, ஏதேதோ செக்ஷனகளைப்போட்டு, வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

அவர்கள் அறப்போர் செய்தார்களாம்! சட்டசபைக்கு முன்னின்று சத்யாக்ரகம் செய்தனராம். அதனால் தான், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சியில், காங்கிரஸ் தியாகிகளே சத்யாக்கிரகம் செய்கிறார்கள்.

மாற்றுக் கட்சியினர், மக்களின் குறைகளைக் கூறி மறியல் அறப்போர் ஏதாவது துவக்கினால் தேசத் துரோகிகள் என்று செப்பி மண்டையிலடிப்பது சகஜமாயிருந்துவருகிறது, அரசினருக்கு. இப்போது தியாகிகள் செய்கிறார்கள் அறப்போர். அவர்களது குறைகளைக்கூட ஆளும் சர்க்கார் கவனிக்கவில்லையாம்.

"ஐயன்மீர், சுதந்திரப்போராட்டத்துக்காக, உங்களைப்போல் நாங்களும் பாடுபட்டோம். அதனால், வாலிபத்தைக் கருக்கிக்கொண்டோர் பலர். வாழ்க்கையைப் பாலைவனமாக்கிக்கொண்டோர், ஏராளம் எனினும், யாருக்கோ இன்று நாங்கள் கஷ்டப்பட்டதின் பலன் போய்ச் சேருகிறது. மரம் நட்டோர் ஏங்குகிறோம், கனிபறிக்கிறார்கள் நேற்று வந்தவர்கள்! நீங்களும் அவர்களைத்தான் போற்றுகிறீர்கள், புகழ்கிறீர்கள். நொந்துபோன எமது குடும்பங்களுக்கு ஆதரவு தரலாகாதா? வாழ்வளிக்க வசதியுண்டாக்கலாகாதா?" என்பது தான் அவர்களது குறை.

இந்தக் குறையினைக் கேட்டறியவும் முயலவில்லை, காங்கிரஸ். மிராசுதார் பண்ணையில் கூலி அதிகம் கேட்டு ஏழைகள் கிளர்ச்சி செய்கிறார்கள் எனின் ஓடமுடியும், எங்கெங்கே பணக்காரர்கள் உள்ளார்கள் என்று தேடமுடியும், நேற்றுவரையில் எதிர் முகாமிலிருந்தவர்களை இழுத்துவந்து மந்திரிப் பதவி அளிக்க இயலும், ஆனால் தியாகிகளின் குறைகளைக் கேட்டுக்களைய நேரமில்லை! காரணம் நினைப்பு இல்லை.

ஆகவே, அவர்களும், "கண்ணீர் சிந்தி வளர்த்தோம் சர்வேசா, இன்று கட்டையாகிறதே கட்சி மகேசா" என்று ஒரு குரல் அழுது விட்டு, அறப்போர் துவக்கும் கட்டத்துக்கு வந்திருக்கிறார்கள்.

ஆனால், மாவட்டம்தோறும் திக்விஜயம்' செய்யும் காமராஜரோ காங்கிரஸ்தான் கட்டுக்கோப்பானஸ்தானம்—அதைத்தான் மக்களும் நம்புகிறார்கள் —காங்கிரசை விட்டால், வேறு கதியில்லை நாட்டுக்கு, என்று கர்ச்சிக்கிறார்.

இதோ, கச்சை கட்டுகிறார்கள் காங்கிரஸ் தியாகிகள்! எமக்கென்ன செய்தீர், என்று கேட்கிறார்கள்.

சாதுக் குணம் கொண்டோர், ஆட்சியாளர் தம் அலட்சியத்தைக் கண்டிக்க அறப்போரிலீடுபடுகிறார்கள். கொஞ்சம் முரட்டுச் சுபாவம் கொண்டோர், காங்கிரசை ஆளும் கனவான்களைத் துணிந்தே கேள்விகள் கேட்கிறார்கள்.

"இன்றைய நிர்வாகத்தில் ஊழலும் இலஞ்சமும் சுயநலமும் தலைவிரித்துத் தாண்டவமாடுகிறது,"

"சர்க்கார் பொதுப்பணம் ஒரு சார்பாக செலவு செய்யப்படுகிறது."

பகிரங்கமாகவே இப்படிக் குற்றம் சாட்டுகிறார் சிவில்லிப்புத்தூருக்கருகிலுள்ள எஸ். கே. முத்துச்சாமி தேவர் என்பவர். தியாகமணிகளின் முன்னோடியாகத் திகழ்ந்தவராம் இவர்! வாழ்நாளில் பெரும் பகுதியை சிறைகளிலேயே கழித்தவராம்! காங்கிரஸ் மகாசபைக்கு இழுக்கு ஏற்படுகிறதென்றால் சீறிவரும் சிறுத்தையாக மாறிவிடுவாராம்! அவர், கூறுகிறார் இப்படி, காமராஜருக்

குப் பகிரங்கக் கடிதம் என்று ஒரு துண்டறிக்கையே வெளியிட்டிருக்கிருர்.

"தங்களை எடுக்கொண்டால் தாங்களே சட்டம் மீறி நடந்துவிட்டு கோர்ட்டில் பொய் சத்தியம் செய்த குற்றத்தை செய்தவர்களாவீர்கள். எப்படி எனில் குடியாத்தம் தொகுதியில் தேர்தலுக்கு நின்றீர்களே அப்போது தேர்தலுக்காக எவ்வளவு செலவு செய்தீர்கள்? ரூபாய் பத்தாயிரத்துக்கு மேல் செலவு செய்யக்கூடாதென்று பார்லிமெண்டுவிதி இருக்கும்போது அதற்கு மாருக நீங்களும் உங்கள் கையாளும் கூடி உங்கள் தேர்தலில் லக்ஷக்கணக்கில் செலவு செய்துவிட்டு செலவு கணக்கு கொடுக்கும்போது தாங்களோ தங்களின் அதிகாரம் பெற்ற ஏஜண்டோ பத்தாயிரத்துக்கு மேல் செலவு செய்யவில்லையென்று ஒரு கோர்ட்டார் முன்னின்று பொய் சத்தியம் செய்து 2 ரூபாய் முத்திரை காகிதத்தில் கையெழுத்துப் போட்ட ஒரு பெரும் பொய்யர் என்பதை மறுக்கமுடியாது."

கூறுபவர் ஒரு காங்கிரஸ்காரர்! குடியாத்தம் தேர்தலில், எப்படி காங்கிரஸ் வெற்றி பெற்றது என்பது இப்போது புரிகிறதா? குடியாத்தத்தில் மட்டுமல்ல; பொதுத் தேர்தலில் எப்படி காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி பெறுகிருர்கள் என்பதையும் அவர் கூறுகிருர்,

"தங்களின் சகாக்களாக இருந்து சட்டசபையில் சட்டமியற்ற தங்களை ஆதரிக்கும் அங்கத்தினர்களில் பெரும்பாலோர், ரூபாய் பத்தாயிரத்துக்கு மேல் செலவு செய்துவிட்டு தங்களைப் போலவே சட்ட வரம்புக்கு மீறி செலவளிக்கவில்லை என்று கோர்ட்டில் பொய் கையெழுத்திட்ட மகா பொய்யர்களேயாகும்."

கூறுவது, எதிர்க்கட்சிக்காரரல்ல! வாழ்நாளில் பெரும் பகுதியைச் சிறையிலேயே கழித்ததாகக் கூறப்படும் ஒரு காங்கிரஸ்காரர்—காமராஜர் எப்படி தேர்தல்களை நடத்துவார், அபேட்சகர்களை வெற்றிபெறச் செய்வார் எனும் விபரத்தை விளக்குகிருர், இவ்வண்ணம்.

"காந்தியடிகளின் பெயரை உபயோகப்படுத்த உங்கள் கூட்டத்துக்கு என்ன யோக்கியதை இருக்கிறது.

பயப்படாமல், பொய் சத்தியம் செய்கிற பகல் கொள்ளைக்காரர்களான உங்கள் கூட்டம் ......

மக்கள் உழைத்து உழைத்து உங்களின் சோம்பேறிக் கும்பலுக்குக் கொடுத்துவிட்டு தோலும் நரம்புமாகக் காட்சி அளிக்கிருர்கள்.

ஒருசில ஆடம்பரக் கூட்டத்தின் தலைவளுக தாங்கள் இருந்துகொண்டு காந்தி அடிகளின் பேரைச் சொல்லி பாமர மக்களை ஏமாற்றி வரும் தங்கள் கும்பல்களின் ஏமாற்றம் எத்தனை நாளைக்கு பலிக்கும் என்று நம்புகிறீர்கள்"

கேட்கிருர், அவர்! வார்த்தைகளில் கடுமையும் கோபமும் கூத்தாடுகின்றன. இவ்வண்ணம்எழுத நமக்குக்கூட மனம்கூசும். அவரோ, காங்கிரஸ் கூடாரத்திலிருப்பவர், பாம்பின் கால் பாம்பறியும் எனும் பழமொழிப்படி எதையும் அறியும் வாய்ப்புப் பெற்றவர், ஆகவே இப்படித் தீட்டுகிருர்.

வாசகத்தைக் கவனித்தீர்களா, காமராசரும் அவர் வைத்திருக்கும் கும்பலுமே, குட்டிச் சுவராக்குகிறது என்று கூறுகிருர்.

காங்கிரசில் இப்படியொரு கும்பலைச் சேர்த்துவைத்துக்கொண்டு கொட்டமடிக்கிருராம் காமராசர்! அந்தக் கும்பல் ஆடம்பரக் கூட்டமாம்—அது, சுகமாக வாழ்கிறதாம்!

முத்துச்சாமித் தேவராவது உணர்ச்சியை மூடிவைக்க முடியாத ஒரு தொண்டர். ஆனுல் மூதறிஞர் என்று போற்றப்படும் ஆச்சாரியாரே அண்மையில் ஓரிடத்தில், காங்கிரஸ்காரர்களைப் பற்றிப் பேசியது உங்களுக்குக் கவனம் இருக்குமே!

"நன்ருக உடுத்துகிருர்கள், உண்கிருர்கள், ஆடம்பரமாக வாழ்கிருர்கள். இவ்வளவு செலவுக்கும் ஏது இவர்களுக்குப் பணம்? ஏதாவது வேலை செய்து சம்பாதிக்கிருர்களா என்ருல், அப்படித் தெரியவில்லை. ஏது பணம்?"

ஏது பணம் என்கிற கேள்வியோடு, சிந்தனையைக் கிளறும் அளவில் நின்றுவிட்டார் ஆச்சாரியார். முத்துச்சாமியார், அதற்குப் பதிலளிப்பது போலக் கூறுகிருர், ஒரு கும்பல் மக்களைச் சுரண்டி காங்கிரசின் பேரால் தின்றுகொண்டிருக்கிறது, என்பதாக.

அக்கும்பலைக் காமராஜரும் வளர்க்கிருராம்! அது தனக்குச் சாதகமாக இருக்கும் என்பதாக!

திமிர்கொண்ட மிராசுதார்கள் ஒவ்வொருவரும் பல கையாட்களை வைத்துக்கொள்வதும், சர்வாதிகாரிகள் தனக்குப்பக்கதில் உறுதுணைவர்கள் பலரை இறுத்திக்காப்பதும் கேள்விப்பட்டிருக்கிருேம். அரசியலிலும் அப்படியிருக்கிறதாம்! காமராஜர், இதெற்கென

திருமண அழைப்பு

வள்ளுவராண்டு 1987, ஆவணித் திங்கள் 4-ஆம் நாள் (19—8—'56) ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணியளவில் இராசீபுரம் எனது இல்லத்தில் சி. என். அண்ணுதுரை அவர்கள் தலைமையில் எனது மகன் செல்வன் ஏ. சீனிவாசனுக்கும் (நகர தி. மு. க. பொருளாளர்) செல்வி பாக்கியத்திற்கும் நடைபெறவிருக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்குத் தாங்கள் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,
கே. அங்கமுத்து.

ஒரு குழுவைக் காங்கிரசில் வைத் திருக்கிறாராம்.

கொழுக்கும் குழு —கும்பிக் கொதிக்க அறப்போர் புரிந்து சிறைக்குச் செல்லும் குழு— குறைகளைக்கண்டு கிளர்ச்சி செய்யும் குழு, என்று இப் படி அமைந்துபோய்க்கிடக் கிறது, காங்கிரஸ்.

இந்த இலட்சணத்தில், நம்மை இருக்குமிடம் தெரியாமல், செய் யப்போகிறாராம் காமராஜர். எங் கெங்கு போனாலும் அங்கெங்கு பேசுகிறார்!

இப்படித்தமிழ்நாட்டில்காங்கிரஸ் கட்சி, காமராஜர் காங்கிரஸ் என் றும், கண்டிப்போர் காங்கிரஸ் எனவும் சிதறுண்டு கிடப்பதை மேலிடமும் அறியாமலில்லை. அத னால்தான், தேர்தல் சம்பந்த மான காரியங்களைக் கவனித்துச் செய்ய மேலிடத்திலிருந்து இரு வரை அனுப்பியுள்ளது.

ஒருவரான வாசவதா என்பார் உரைக்கிறார், “பழைய காங்கிரஸ் வாதிகளை மீண்டும் காங்கிரசில் தீவிரப் பணியாற்றும்படிச் செய் யப்போகிறேன்” என்பதாக.

எங்கேயிருக்கிறார்கள் பழைய காங்கிரஸ் வாதிகள்? அதோ சட்டசபை முன்பு போலீசார் துரத்தித் துரத்தி அடிக்க சத் யாக்ரகம செய்துவிட்டு ‘லாக்அப்’ புக்குச் சென்றுகொண்டிருக்கிறார் கள்.

ஓமாந்தூரார் போன்றோர், சலித் துப்போய், கிருஷ்ணா ராமா கோவிந்தா என்று காவியுடுக்காத சாமிகளாய் ஆகிவிட்டார்கள்.

முத்துச்சாமித் தேவர் போன் றோர், முணுமுணுத்தபடியும் கொஞ்சம் ஆத்திரம் அதிகமானால் பகிரங்கக் கடிதம் எழுதிக் கொண்டும் இருக்கிறார்கள்.

இது காமராஜுக்கும் அவ ருடைய காங்கிரசுக்கும் ஏற்பட் டிருக்கிற நிலைமை! இந்த அழகில், இந்தக் கட்சிதான் நிலையான அரசை நிறுவி, நீதியாகப் பரிபால னம் செய்யப்போகிறதாம்!

மாற்றுக் கட்சிகள் சர்க்கார் மீது, குற்றம் சாட்டுவதைக் கண் டுள்ளோம்.

இப்போது சொந்தக் கட்சி யினரே, குற்றம் கொட்டுகிறார்கள். அதுவும் எப்படி? உண்டு கொழுப் பவரே! ஊரார் சொத்தை மேய் வோரே! சர்வாதிகாரியே! தனக் கென ஒரு கூட்டத்தைக் கூட்டி வைத்த வண்ணம் கொட்டம் அடிப்பவரே! என்று

பலர் குமுறி, அறப்போரும் தொடுக்கிறார்கள்—சிறைக்கும் செல்லத் துணிந்துவிட்டார்கள், காங்கிரஸ் ஆட்சியின் கையாலா காத்தனம் கண்டு.

புயல், நான்கு முனையிலும்! ஆனால், காமராசரோ, கர்ச்சிக் கிறார். ★

325 கோடி!

ஜமீன்தாரிகளை ஒழித்துவிட்டோம்! — என்று சண்டப்பிரசண்டம் செய் கிறார்கள், காங்கிரஸ் தலைவர்கள்.

சட்டமூலம் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் பலருக்கு ‘உண்மைதான் போலும்’ என்று கூட எண்ணச் செய்கிறது.

ஜமீன்தாரிகளை ஒழித்ததாகச் சொல்லுகிறார்களே, அதனால், எந்த ஜமீன்தாரின் வாழ்க்கை இறங்கியிருக்கிறது! உதகைவாசம், கிண்டிக் குதிரைப்பந்தயம், உல் லாச வாழ்வு, எடுபிடிகள் கூட்டம், இருமாப்பு நிறைந்த தோற்றம், ஏஜெட்டுக்காரர்கள் ஷெட்டில், தேவையான கேளிக்கைகள் — இதில், எது குறைந்திருக்கிறது?

ஜமீனுக்குப் போகவேண்டுமே, வசூலாயிற்றோ பணம் இல்லையோ’ பாசனம் எப்படியிருக்கிறதோ என் னமோ, பலாத்தோப்பு பணத்தில் மீதம் வரவேண்டியது எப்போது வரும் என்று முன்பெல்லாம் கணக் குப் பார்ப்பதற்குப் பதில், இப்போ தெல்லாம் ‘எப்போது நமக்கும் இராமநாதபுரம் ராஜாவைப்போல ஒரு சான்சு கிடைக்கும்?’ யாரைப் பிடித்தால் கவர்னரின் சிநேகம் கிடைக்கும், கதர்போடாமலே காங் கிரஸ் கனவான் ஆகமுடியாதா, என்கிற ‘புது வேலைகள்’ வந் துள்ளனவே தவிர, போக போக் கிய வாழ்க்கையில் ஒரு துளியும் இறங்குமுகம் இல்லை.

எங்கிருந்து இவர்களுக்குப்பணம் கிடைக்கிறது? ஒருவேளை, முன்பு சேர்த்துவைத்திருந்த பணத்தைக் கொண்டு சிங்கார வாழ்வை நடத்துகிறார்களோ?-எனும் சந்தே கம் எழக்கூடும்.

இல்லை! இல்லை!! இத்தனை நடவடிக்கை களுக்கும்பணம்சர்க்காரேகொடுத்துவருகிறது

ஜமீன்தாரிகளை ஒழித்துவிட்டதா கக்கூறும் காங்கிரஸ் சர்க்கார்தான், இவர்களுக்குப் பணம் தந்து வருகி றது.

ஒவ்வொராண்டும், இதற்கென ஒரு தொகையை, அவர்களுக்கு நஷ்ட ஈடாக அளித்து வருகிறது. இப்படி அளிக்கப்பட்டு வரும் தொகை எவ்வளவு ஆகும் என்று இந்த கிழமை இந்திய ரிசர்வ் பாங்கி ஒரு கணக்கு எடுத்திருக் கிறது.

அதன்படி 325 கோடி ரூபாய் கள் இவர்களுக்குத் தரவேண்டுமாம்.

சர்வதேச பாங்கி, அமெரிக்காவி லிருந்து கடன், முதலியவைகளை வாங்கும்போது சர்க்காரின்கணக்கு நோட்டில் ‘கடன்’ என்று குறிக்கப் படுமல்லவா, அதுபோலவே, இந்த 325 கோடி ரூபாயும், ஜமீன்தாரி களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கடன் என்று குறிக்கப்பட்டிருக் கிறதாம்!

கடன் வாங்கி கனஜோராக கீட் டிப் புடவை யெடுத்து சிங்காரித்து வந்தாளாம், ஒருத்தி! அதைப் போல, ஊர் மெச்சுவதற்காக, ‘ஜமீனை ஒழித்துவிட்டோம்’ என்று ஜம்பம் பேசுகிறது காங்கிரஸ் சர்க்கார்.

முதுகிலோ, சுமைபோல 325 கோடி கடன், இருக்கிறது.

இந்தக் கடனை, எப்போதும் ஜமீன்தாரிகள், அடைய அருகதை யுடையவர்கள். எனவே காங்கிரஸ் சர்க்கார் போய் வேறு சர்க்கார் அமைந்தாலும், கொடுக்கக் கட மைப்பட்டவர்களே ஆவார்கள்.

இருக்கிற ஜமீன்தார்களை விரல் விட்டு எண்ணலாம். ஆனால் அவர்களுக்காக சர்க்கார் தர இருக் கிற கடன் 325 கோடி!

இந்த 325 கோடியைக்கொண்டு ஐந்தாண்டுகளுக்கு எந்த வரியும் போடாமல், சென்னை அரசாங்கம் இயங்க முடியும். அவ்வளவு தொகையும் போவது, ஜமீன்தார் களுக்கு.

முன்பாவது பணத்துக்கு என்ன செய்வது, குத்தகைக்காரன் கொடுப் பானா என்கிற சஞ்சலமாவது இருந் தது ஜமீன்தார்களுக்கு இப்போது, சர்க்காரன்றோ, ‘செக்’ வழங்கு கிறது! ஏன், குஷாலாயிருக்க மாட் டார்கள்—கொடி கட்டி ஆளவும் முயற்சிக்கமாட்டார்கள்.

எதேச்சாதிகாரியின் வழக்கம்

ஈரான் ஷாவை எதிர்த்தொழிக்க பலாத்காரம், சதி, புரட்சி எனும் கருவிகளைப் பயன்படுத்தினர்; நாட்டிலே இதனால் இரத்தக்களறியும் பொருள் நஷ்டமும் ஏற்பட்டது; அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நாசவேலையில் ஈடுபட்டார், எனவே முசாதீக் மரணதண்டனை தரப்படவேண்டியவர், எனினும் முதியவர், நாட்டுக்கு ஆர்வத்தோடு பணியாற்ற முயற்சித்தவர் என்பதை எண்ணி, மூன்றாண்டுகள் சிறையில் இருந்தால் போதும், என்று கூறி, ஈரான் நாட்டு ஷா, தமது பெருந்தன்மையையும், ராஜதந்திரத் திறமையையும் காட்டிக் கொண்டார்.

மூன்றாண்டு கழிந்தது, முதுகிழவர் முசாதிக் விடுதலைபெற்றார்— இருளோ இடியோ, ஒளியோ ஓய்வோ எது அவருடைய எதிர்காலமோ என்று இப்போது கூறுவதற்கில்லை என்ற போதிலும், இப்போது அவர், தமது இல்லத்தில் இனச் சூழ்நிலையில் இருப்பது கூறப்பட்டிருக்கிறது — தேனென அச் செய்தி இனிக்கிறது!

தேளெனக் கொட்டும் செய்தியை டில்லி தர்பார் தருகிறது.

பலாத்காரம், புரட்சி, சதி, நாசவேலை இரத்தக் களறி, பொருள் நஷ்டம், சர்க்காரைக் கவிழ்த்தல்— எனும் எதனையும் செய்து இடர்ப்பாடு ஏற்படுத்தவில்லை — அவர் 'ஏதேதோ' செய்துவிடக் கூடும் என்பதை 'மோப்பம்' பிடித்துக் கண்டறிந்ததையே காரணமாகக் கொண்டு, காஷ்மீரச் சிங்கம் என்றும், நேருவின் நண்பர் என்றும், வகுப்புவாதத்தின் வைரி என்றும், ஜின்னாவையே சின்னா பின்னமாக்கக் கூடியவர் என்றும் போற்றிப் புகழப்பட்ட ஷேக் அப்துல்லாவைச் சிறையிலிட்டனர்.

விசாரணை இல்லை! வழக்கு இல்லை!! ஆண்டு மூன்று உருண்டோடி விட்டன, இன்னமும் வழக்கும் பதிவாகவில்லை, வெளியேயும் விடவில்லை.

காஷ்மீரத்தின் முதலமைச்சராக இருந்து வந்தவர் மீது, திடீரெனத் துரோகக் குற்றம் சுமத்தி, அதற்கான ஆதாரமும் காட்டாமல், அதை உண்மை என்று உலகு ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் வழக்கும் நடத்தாமலேயே, மூன்று ஆண்டுகள் உள்ளே போட்டுப் பூட்டி வைத்தனர்!

இந்த மூன்றாண்டுகளிலே, காஷ்மீரத்துக்கு பக்ஷி குலாம் முதலமைச்சர்!

இந்தக் குலாம் சர்க்காருக்கு மெத்தச் செல்வாக்கு என்றும், காஷ்மீரத்து மக்கள் அனைவரும் அவரிடம் கைகட்டி வாய்பொத்தி நின்று சேவை செய்வதாகவும், எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது.

ஷேக் அப்துல்லாவைச் சிறையிலிட்டதையும், குலாம் சர்க்கார் அமைக்கப்பட்டதையும், காஷ்மீர் மக்கள், ஏற்றுக்கொண்டுவிட்டனர் — ஆதரிக்கின்றனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

எனினும், மூன்றாண்டுகளுக்குப் பிறகும், ஷேக் அப்துல்லாவுக்கு விடுதலை தரவில்லை — காரணமும் காட்டப்படவில்லை.

முசாதிக் விடுதலையானார், வீடு சென்றார் என்ற 'செய்தி'யைப் பார்க்கும் அந்த நேரத்தில், மூன்றாண்டுகள் சிறையில் இருந்து வரும் ஷேக் அப்துல்லாவை மேலும் ஒரு ஆறுமாத காலம் சிறையிலேயே வைத்திருக்க, சர்க்கார் உத்தரவு பிறப்பித்துவிட்டனர் என்ற செய்தியையும் காண்கிறோம்.

இதை, நல்லாட்சி என்று, எப்படி கூறுவது?

ஆட்சியைக் கவிழ்த்திட பயங்கரமான பலாத்காரத்தையே நடத்திக் காட்டியதாகக் கூறப்படும் முசாதிக், மூன்றாண்டுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்; ஆனால் இன்ன குற்றம் செய்தார் என்று வழக்குப் பதிவு செய்யவும் வக்கற்றுக்கிடக்கும் நிலையில், மூன்றாண்டு சிறையில் அடைத்து வைத்தது போதாது என்று, மேலும் ஆறுமாதம் சிறை என்று கூறப்பட்டிருக்கிறது.

நீதியும் நேர்மையும், எங்கே போயிற்று?

மூன்றாண்டுகள் முடிந்தும், ஷேக் அப்துல்லா செய்த குற்றம் இன்னது என்று கண்டறிந்து வழக்குத் தொடரவும் அறிவும் ஆற்றலும் அற்றுப்போன சர்க்காருக்கு, அவரை மேலும் பூட்டி வைக்க உரிமைதான் ஏது!

ஷேக் அப்துல்லாவின் வீழ்ச்சி பற்றி, காஷ்மீர்மக்கள் விம்மவில்லை கொதிக்கவில்லை, குலாம் சர்க்கார் மக்களின் ஆதரவு பெற்றுவிட்டது என்றெல்லாம் கூறப்படுவது உண்மையானால், ஷேக் அப்துல்லாவை வெளியேவிடப்பயப்படுவானேன்?

வெளியே ஷேக் அப்துல்லா விடப்பட்டால், குலாம் சர்க்கார் கிலியாலேயே வீழ்ந்துபடும் என்ற அச்சமா?

ஷேக் அப்துல்லாவின் கட்சியினர் தேர்தலில் ஈடுபட்டு, ஆட்சியைக் கைப்பற்றி — டில்லியின் ஆதிக்கத்தை அறுத்தெறிந்துவிடுவார்கள் என்பதால் மூண்டுள்ள கிலியா?

முசாதிக் விடுதலை பெற்றபோது ஷேக் அப்துல்லாவை இனியும் பூட்டி வைப்பது, மனிதத் தன்மைதானா? இப்படிப்பட்ட எதேச்சாதிகாரக் கோலம் பூண்டு கொண்டு, அடக்குமுறையை அவிழ்த்துவிட்டு ஆட்சி செய்பவர்கள்தான! குக் கெல்லாம் நியாயம் போதிக்கிறார்கள்; பஞ்சசீலம் பற்றி உபதேசிக்கிறார்கள்.

ஸ்ரீ நகர் சிறைக்காவலாளி கூடக் கைகொட்டிச் சிரிப்பான்!

முசாதிக் விடுதலை பெற்றார்! ஷேக் அப்துல்லாவின் சிறைவாசம் நீடிக்கப்பட்டது என்ற இரு செய்திகளையும் ஒரு சேரக் காண்போரின் கண்களில் நீர் துளிர்க்காமலிருக்க முடியாது!

ஆனால் காலக் குறியை உணராதார்தான், கண்ணீர்த்துளிகளைக் கண்டு ஏளனம் செய்வது வழக்கமாயிற்றே!!

★

உலக அரங்கில்

கோல்டு கோஸ்டு

*

உலக நாடுகளில், மிக விரைவில் சுதந்திர பூமியாகத் திகழப் போகும் தேசஙகளில் கோல்டு கோஸ்டும் ஒன்ருகும். ஆபிரிகாவிலுள்ள இப்பாகம் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தின் கீழுள்ளது. கடந்த மூன்ரும் தேதி கூடிய கோல்டு கோஸ்டு சட்டசபை, ஒரே குரலில் இந்தச் சுதந்திரத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

*

இந்தோனேஷியா

★

டச்சு சர்க்காருக்குச் சேர வேண்டும் என்று கருதப்படும் கோடிக்கணக்கான கடன்களைத் திருப்பித்தர முடியாதென்று இந்தோனேஷியா திட்டவட்டமாக அறிவித்துவிட்டது, இந்த வாரம். சூயஸ் கால்வாயைத் தேச உடமையாக்க எகிப்து மேற்கொண்ட நடவடிக்கை எப்படி அகில உலகிலும் பரபரப்பை உண்டு பண்ணியதோ அதைப்போலவே இந்தோனேஷியாவின் அறிவிப்பும் திடுக்கிடக்கூடியதெனக் கருதப்படுகிறது. இந்தோனேஷியாவில் டச்சுக்காரர்கள் ஆட்சிபுரிந்தபோது பல வழியிலும் 41 கோடி பவுன் செலவழித்திருந்தார்கள்! இத்தொகை, தங்களை ஆளவும், தங்கள் சுதந்திரக் கோரிக்கையை நசுக்கவும், செலவழிக்கப்பட்டதாகும் என்றும், ஆகவே அதனைத் திருப்பித்தர வேண்டிய அவசியம் இல்லையென்றும் இந்தோனேஷியா சர்க்கார் அறிவித்துள்ளது.

*

அர்ஜெண்டைஞ

★

முக்கியமான முடிவுகளைச் செய்வதில்கூட மக்கள் அபிப்பிராயத்தைக் கேட்க மறுக்கிருர்களல்லவா, காங்கிரஸ் மந்திரிகள்! அண்மையில் பிரான் எனும் சர்வாதிகாரியை ஒழித்துக் கட்டிய அர்ஜெண்டைஞ, நாட்டின் எதிர்காலம் எப்படியிருக்கவேண்டும் என்பது குறித்து மக்களின் கருத்துக்களைக் கோரியுள்ளது. 1935ல் இயற்றப்பட்ட அரசியலமைப்பை மாற்றலாமாகூடாதா ஜனநாயகமும் சுமுகமும் நிலவ எப்படிப்பட்ட சர்க்கார் இயங்க வேண்டும், என்னென்ன நன்மைகளைச் செய்தால் மக்கள் சுகமாக வாழ முடியும், சர்க்கார் செய்யாமல் விட்டுவிட்ட நல்ல காரியங்கள் எவை—என்பது பற்றியெல்லாம் ஒரு கேள்வித்தாளைப் பிரகடனப் படுத்தியுள்ளது. இதற்குப் பதில் எழுதி அனுப்பும்படியும், மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இப்படி ஒரு சர்க்கார் தபால் மூலம் மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்பது, உலகிலேயே இதுதான் முதல் முறையென்று கருதப்படுகிறது.

*

ஸ்விஸ்

*

எகிப்து நாசர், சூயஸ் கால்வாயைக் குறித்து எடுத்துக்கொண்ட நடவடிக்கை உலகையே நிலை கலக்கி வருவதை அனைவரும் அறிவோம்! "இன்னெரு உலகப்போர் மூளுமோ?", என்கிற அளவுக்கு எங்கும் அச்சம் ஏற்பட்டுள்ளது! இதுபற்றி பிரிட்டன் ஒரு மாநாடு கூட்ட இருப்பதும், அதில் கலந்துகொள்ளுமாறு பல நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதும் தெரிந்த விஷயமே. இந்த மாநாட்டை ஸ்விட்சர்லாந்தில் நடத்தலாம் என்று எண்ணி பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா மூன்றும் ஸ்விஸ் சர்க்காரைக் கேட்டன. பிரச்னையின் முக்கியத்துவத்தையும் தகராறையும் கண்ட ஸ்விஸ் சர்க்கார் மறுத்துவிட்டது.

ஸ்விஸ் நாடு, எப்போதுமே, சமரசம் விரும்பும் நாடாகும். உலகப் போரின்போதுகூட ஒதுங்கியே இருந்தது. இந்த நடுநிலைக்குக் கேடு வரக்கூடாதென்பதால்தான், தகராறுக்குரிய இந்த மாநாடு நடக்க அனுமதிக்கவில்லை, ஸ்விஸ்.

*

இஸ்ரேல்

*

"சூயஸ் கால்வாய் பாதை அடைபட்டுவிட்டால் என்ன செய்வது?" என்பதுபற்றி இஸ்ரேல் வெளிநாட்டு மந்திரி மாற்று யோசனை வெளியிட்டுள்ளார். அதன்படி இஸ்ரேலுக்கு சொந்தமான செங்கடலிலிருக்கும் லொத் எனும் துறைமுகத்திலிருந்து ஹைபா வரைக்கும் புதிதாக எண்ணெய்க் குழாய் ஒன்றை அமைத்து, மத்தியக்கிழக்கு எண்ணெயைக்கொண்டுபோவது. இந்த யோசனை மிகவும் சாத்யமானதாகுமென்று அவர் அபிப்பிராயப்படுகிருர்.

*

எண்ணெய்

*

பிரிட்டனும் பிரான்சும், நாசரின் அறிவிப்பு கண்டு அலறுவதற்குள்ள முக்கிய காரணம் எண்ணெயாகும். மத்திய கிழக்கிலுள்ள அரபு நாடுகளிலிருந்து கிடைக்கும் மண்ணெண்ணெய்ப் பொருள்கள் மேற்கு ஐரோப்பாவின் தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமாகும். நிலக்கரிக்கு அடுத்தபடி, இன்று எண்ணெய்தான் முக்கிய அங்கம் வகிக்கிறது. இந்த எண்ணெயில் பெரும் பகுதி சூயஸ் கால்வாய் வழியாகவே செல்லவேண்டியிருக்கிறது! ஈராக், குவாய்த், சவூதி அரேபியா, பாரசீகம் முதலியவைதான் எண்ணெய் வளம் நிரம்பிய நாடுகள். எகிப்தைப் போல் இவையாவும் இஸ்லாமிய நாடுகளே. எண்ணெய் வளமிக்கவை யென்பதால் இந்நாடுகளைத் தங்கள் வசம் வைத்துக்கொள்ள வல்லரசுக்குள் பலத்த போட்டியுண்டு! சவூதி அரேபியாவில் அமெரிக்காவுக்கு செல்வாக்குண்டு, ஈராக்கும் பாரசீகமும் பிரிட்டனுக்கு வேண்டியவைகளாகும். என்ருலும், இப்போது எகிப்துக்கு ஆபத்து என்றதும் யாவும், தொடைதட்டிக்கொண்டு கிளம்பிவிட்டன!

*

REGD. NO. M. 4642 போன் நெ. 15

மூளை உழைப்பாளிகளுக்கு

உடலின் முக்கிய உறுப்புக்களில் இருதயத்தைப்போல் மூளையும் முக்கியமானதாகும். அதற்கும் சில பயிற்சிகள் உண்டு. ஒரு அறையில் நீண்ட நேரம் அசைவில்லாமல் உட்கார்ந்துகொண்டு ஒரே பொருளைப்பற்றி அல்லது ஒரே பகுதி வேலையைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பவர்களுக்கு மூளையின் நலன் பாதிக்கப்படுகிறது. மூளையினது இயக்கத்திற்கு அடிப்படையாய் இருப்பது நரம்புகளேயாகும். மனக்கவலை, உணவுக் கோளாறு, எழுச்சியூட்டும் பானவகைகள், மலச்சிக்கல் முதலிய காரணங்களாலும் நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. நாம் செய்யும் ஒவ்வொரு வேலையும் மூளையைச் சாராமல் இருப்பதில்லை. சூடு, குளிர்ச்சி, அதிர்ச்சி, நெகிழ்ச்சி, ஆத்திரம், அடக்கம் எல்லாம் மூளையிலிருந்தே புறப்படுகின்றன. மூளைக்கு ஓயாமல்வேலைகொடுத்து கொண்டிருப்பவர்களுக்கு அவ்வப்போது அதாவது சிற்சில காலத்தில் சோர்வு உணர்ச்சி தோன்றும். ஜீரணக் கோளாறும் ஏற்படும். இவற்றைப் போக்குவதற்குச் சரியான பரிகாரம் திறந்த வெளியில் உடற்பயிற்சி செய்வதுதான். அதிலும் மிகக் கடுமையாகச் செய்தலும் நலம் என உடல்நல மருத்துவர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். காரணம் நரம்புகளுக்குத் துரிதமாகச் செல்லும் இரத்தம் இருதயத்தையும் மூளையையும் சரிவர இயக்குவதோடு, உடலின் தன்மையையும் செம்மைப்படுத்துகிறது. இவ்விதம் உடற்பயிற்சி செய்வதில் மூளைக்கு வேலை ஏற்படாதவாறு (அதாவது சிந்தனையற்ற பயிற்சி) கவனித்துக்கொள்ளவேண்டும். உதாரணமாகச் சிலம்பம், மைல் ஓட்டம், கம்பு கத்திச் சண்டை, பந்தாட்ட வகைகள் முதலியவைகளில் பங்கெடுத்துக்கொள்ளக்கூடாது. ஆகார வகையில் மிகக் கவனம் செலுத்தி முறையாக நடந்துவரவேண்டும். உயிர்ச்சத்துள்ள உணவு வகைகளைக் காலாகாலத்தில் உண்டுவரவேண்டும்.

காபி, டீ முதலிய பானவகைகளை விலக்கிவிடவேண்டும். அல்லது எப்போதாவது சில சமயங்களில் அருந்தலாம். குறிப்பாக மூளை வேலை செய்பவர்கள் சுவாசப் பயிற்சி செய்துவருதல் நலம். பிராணவாயு நுரையீரலில் சென்று மூளைக்குச் செல்லும் இரத்தத்தைச் சுத்தப்படுத்துவதுடன் நரம்புகளையும் சுறுசுறுப்பாக்குகிறது. வலுவான சாதனங்களின்றி இலகுவான முறையில் அதாவது கைகளை முஷ்டி மடித்து உடலை விறைப்பாகவைத்து சுவாசப் பயிற்சியோடு செய்யும் பயிற்சிகளைக் காலையிலும் மாலையிலும் செய்து வருவதால் மூளை நல்ல சக்தியைப் பெற்றுவரும்.

மக்கள் சாதாரணமாகத் தங்கள் நடையைப் பற்றிப் பெரிதும் பொருட்படுத்துவதில்லை. ஆனால் நடையினால் பல நன்மைகள் ஏற்படுகின்றன என்பது உடற்பயிற்சி நிபுணர்களின் அனுபவத்தால் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. உடலின் அழகு, கவர்ச்சித் தன்மை, ஒழுங்கான இரத்த ஓட்டம், சுவாசப் பயிற்சி முதலான பல நடப்பதன் மூலம் ஏற்படும்.

பொதுவாக, நடக்கிறபோது கெட்டியான அல்லது இறுக்கமான ஆடைகளை அணியக்கூடாது உலாவுவதற்கு, எளிய தோற்றமுள்ள ஆடைகளே சிறந்தவை. உணவு உண்ட அரைமணி நேரம்கழித்து நடத்தலே நலம். அதிக வேகமாகவோ, மிகவும் மெதுவாகவோ நடப்பது உடலுக்கு உகந்ததல்ல. நடக்கும்போது நல்ல எண்ணங்களை நினைத்து உற்சாகமாய் இருக்கவேண்டும்.

நிற்க, கால்களில் இருக்கும் பாதரட்சைகள் தளர்த்தியாக, அல்லது இறுக்கமாக இருக்கக் கூடாது. தளர்த்தியாயிருந்தால் அவற்றை இழுத்துக்கொண்டு செல்வதுபோல் ஓர் அசௌகர்ய உணர்ச்சி ஏற்படும், இறுக்கமான காலணியாயிருந்தால் நரம்புகளுக்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடைப்படும்; பின், வலி கொடுக்க ஆரம்பிக்கும், நடையும் தளரும், காலணிகள் — பாதங்களுக்குப் பொருத்தமுள்ளவைகளாயிருக்கவேண்டும். காலணி இல்லாமல் நடப்பதும் நல்லதல்ல.

சரியான முறையில் நடக்கப் பழகவேண்டும். அங்ஙனம் நடப்பது உடலுக்கும் மனதிற்கும் உரியதோர் பயிற்சி ஆகும். உடல் உறுப்புகளின் அசைவு முறையோடு இருந்தால் அவற்றின் பலமும் பயனும் நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

—ஏ. வேணுகோபால்.

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.